# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை
# தமிழ்நாடு காவல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2021–2022

## மானியக் கோரிக்கை எண். 22

# மு.க. ஸ்டாலின்
## முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2021

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I | முகவுரை | | 1 – 2 |
| II | காவல் துறையின் நிருவாக அமைப்பு | | 2 – 5 |
| III | காவல் துறையில் பெண் காவலர்கள் | | 5 – 6 |
| IV | சட்டம் – ஒழுங்கை நிலை நாட்டுதல் | | 6 – 8 |
| V | குற்ற நிகழ்வு நிலவரம் | | 8 – 11 |
| | (1) | பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் தடுக்கும் பிரிவு | |
| | (2) | பெண்கள் உதவி மையம் | |
| | (3) | பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பாக நடைபெற்ற பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | |
| VI | போக்குவரத்து விபத்துகள் | | 12 – 13 |
| VII | காவல்துறையின் சிறப்புப் பிரிவுகள் – ஒரு பார்வை | | 14 – 59 |

| | | | |
|---|---|---|---|
| VIII | காவலர்களுக்கான நலத்திட்டங்கள் | | 60 – 68 |
| | (அ) | தமிழ்நாடு காவல் கருணைக் கொடைத் திட்டம் | |
| | (ஆ) | ஒருங்கிணைந்த உள்சுற்று கைபேசி குழு அட்டைகள் வழங்குதல் | |
| | (இ) | வருடாந்திர அரசு கொடையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் | |
| IX | காவல்துறையில் வாகனவசதி | | 68 |
| X | காவல் துறை கட்டடங்கள் மற்றும் காவலர்களுக்கான வீட்டு வசதி | | 68 – 69 |
| XI | தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் | | 69 – 71 |
| XII | தமிழ்நாடு தடய அறிவியல் துறை | | 71 – 73 |
| XIII | முடிவுரை | | 73 – 74 |
| | விளக்கப்படங்கள் மற்றும் பிற்சேர்க்கைகள் I – VIII | | 75 – 87 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை

# தமிழ்நாடு காவல் துறை

# மானியக் கோரிக்கை எண்.22

# கொள்கை விளக்கக் குறிப்பு 2021 – 2022

## I. முகவுரை

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கும். சாதிமத பிரச்சினைகள் இல்லாத அமைதியான, இணக்கமான சமூகச் சூழல் என்பது மாநிலத்தின் வளர்ச்சிக்கு முற்றிலும் இன்றியமையாதது. மேலும், மாநிலத்திலுள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சமத்துவத்தையும் நீதியையும் இந்த அரசு உறுதிப்படுத்தும். சட்டம் ஒழுங்கை திறம்பட பராமரிப்பதை உறுதி செய்வதற்கும் குற்றங்களைத் தடுப்பதற்கும் காவல் துறை பணியாளர்களை தொடர்ந்து ஊக்கப்படுத்த வேண்டும். இந்த வகையில் காவல் துறையினருக்கும், அவர்கள் பாதுகாத்து, சேவையாற்றும் மக்களுக்கும் இடையிலான நல்லுறவே காவல் பணியின் இன்றியமையாத குறிக்கோள் ஆகும். இத்தகைய

நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதற்காக காவல் துறையினருக்குத் தேவையான பயிற்சி உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். காவல் துறை பணியாளர்களின் குறைதீர்க்கும் செயல்முறைகள் வலுப்படுத்தப்படும். சிறப்பு சட்டங்களை அமல்படுத்தி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், இணையவழி குற்றங்கள், பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் இதர திட்டமிட்ட குற்றங்கள் போன்ற சிறப்பு குற்றங்களின் புலன் விசாரணைக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

## II. காவல் துறையின் நிருவாக அமைப்பு

தமிழ்நாடு அரசின் உள்துறையின் கீழ் காவல்துறை இயங்கி வருகிறது. காவல்துறை தலைமை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), மாநில காவல்துறையின் தலைவராவார். இவர், துறையின் பல்வேறு பிரிவுகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிட்டு வழிநடத்தி வருகிறார். துறையின் பல்வேறு பிரிவுகளில் காவல்துறை இயக்குநர்கள், கூடுதல் காவல் துறை இயக்குநர்கள், காவல்துறைத்

தலைவர்கள் போன்ற பதவி நிலைகளில் உள்ள அதிகாரிகள் தலைமைப் பொறுப்பேற்றுள்ளனர். உயரிய பணி சார்ந்த செயல்பாடுகளை நிர்வகித்திட காவல்துறை தலைமை இயக்குநருக்கு அந்த அதிகாரிகள் உதவி புரிந்து வருகின்றனர்.

தமிழக காவல்துறையின் அமைப்பு முழுமையும் 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு மண்டல காவல்துறை தலைவரின் கீழ் செயல்பட்டு வருகிறது. இம்மண்டலங்கள், காவல்துறை துணைத் தலைவரின் தலைமையில் 11 சரகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மேலும், 7 ஆணையரகங்கள் உள்ளன. அவற்றில் கூடுதல் காவல்துறை இயக்குநர் தலைமையில் சென்னை பெருநகர காவல் துறையும், இதர 6 ஆணையரகங்கள் காவல் துறைத் தலைவர் தலைமையிலும் இயங்கி வருகின்றன. இரண்டு இரயில்வே காவல் மாவட்டங்கள் உட்பட, 39 மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஒரு காவல் கண்காணிப்பாளர் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. 249 காவல் உட்கோட்டங்கள், காவல்

உதவி கண்காணிப்பாளர்கள் அல்லது துணைக் கண்காணிப்பாளர்கள் தலைமையில் உள்ளன. 1,302 சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையங்கள், 47 இரயில்வே காவல் நிலையங்கள், 202 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், 243 போக்குவரத்துக் காவல் நிலையங்கள், 27 புறக்காவல் நிலையங்கள் மற்றும் 30 போக்குவரத்து புலனாய்வுப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. (விளக்கப்படம்–1)

காவல்துறையில், நுண்ணறிவுப் பிரிவு (Intelligence), குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை (CBCID), குற்றம் (Crime), பொருளாதார குற்றங்கள் தடுப்புப் பிரிவு (Economic Offences Wing), சிறப்பு செயலாக்கப் பிரிவு (Operations), சிறப்பு இலக்குப் படை (Special Task Force), தொழில்நுட்பப் பிரிவு (Technical Services), சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பிரிவு (Social Justice and Human Rights), காவலர் பயிற்சி (Police Training), இரயில்வே, ஆயுதப் படை(Armed Police), கடலோர பாதுகாப்புக் குழுமம் (Coastal Security Group), மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு (Prohibition Enforcement Wing), குடிமைப் பாதுகாப்பு மற்றும்

ஊர்க்காவல் படை (Civil Defence & Home Guards) மற்றும் மாநில குற்ற ஆவணக் காப்பகம் (State Crime Records Bureau) போன்ற பல்வேறு சிறப்புப் பிரிவுகள் உள்ளன. (விளக்கப்படம்–2).

காவல்துறையில் 30.6.2021–ன்படி, ஏற்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 1,33,198 ஆகும். அதில் 1,18,881 பணியாளர்கள் தற்போது பணியில் உள்ளனர்.

## III. காவல் துறையில் பெண் காவலர்கள்

சமுதாயத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை கையாள்வதில் காவலர்களுக்கு உதவும் நோக்கில் 1973 – ஆம் ஆண்டு மகளிர் காவல் அணி தொடங்கப்பட்டது. கடந்த 45 ஆண்டுகளில் நிலைமை மாறி, தற்போது சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல், குற்றத்தடுப்பு மற்றும் கண்டுபிடிப்பு, போக்குவரத்து சீரமைத்தல் உள்ளிட்ட அனைத்து வகையான பணிகளையும் மேற்கொள்ளும் வகையில் காவல் துறையின் ஒரு அங்கமாகவே பெண்காவலர்கள் மற்றும் அலுவலர்கள் செயல்பட்டு வருகின்றனர். தற்போது, மாநிலம் முழுவதும் ஒவ்வொரு

காவல் உட்கோட்டத்தின் கீழ், ஒரு மகளிர் காவல் நிலையம் என்ற வகையில் 202 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஒரு பெண் காவல் உதவி ஆய்வாளர், 3 பெண் தலைமைக்காவலர்கள், மற்றும் 12 பெண் காவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

## IV. சட்டம் – ஒழுங்கை நிலை நாட்டுதல்

அமைதி மற்றும் நிலைத்தன்மையை ஏற்படுத்தி அமைதியான சூழ்நிலையில் பொது மக்கள் அச்சமின்றி அன்றாட பணிகளை கவனிக்க ஏதுவாக சட்டம் ஒழுங்கினைப் பராமரிப்பது மாநில அரசின் முதன்மையான கடமையாகும். தீய சக்திகளை ஒடுக்கி, பொது மக்களை காப்பற்ற தமக்கு வழங்கப்பட்டுள்ள தெளிவான வழிமுறைகளை பின்பற்றி காவல்துறை திடமாகவும், முதிர்ச்சியுடனும், பொறுமையுடனும் செயல்பட்டு பொது அமைதியை அச்சுறுத்திய பல்வேறு சூழ்நிலைகளை எதிர்கொண்டு வெற்றி பெற்றுள்ளது. காவல்துறையினர் சட்ட விதிகளை பேணிப்பராமரிக்க சுதந்திரமாக செயல்படும் வகையில் சூழல்

உருவாக்கப்பட்டுள்ளது. இதனால், தற்போது தமிழ்நாடு பொது அமைதி மற்றும் மத நல்லிணக்கத்தை பாதுகாக்கும் சிறந்த ஒரு மாநிலமாக விளங்குகிறது. இதன்மூலம் பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி, பல்வேறு அமைப்புகள் ஆண்டு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களை நடத்தியிருந்த போதும், பல தலைவர்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாள் நிகழ்ச்சிகள் நடைபெற்றபோதும், வன்முறைக்கு இடம் தராத வகையில் தமிழக காவல்துறை சிறப்பாக கையாண்டு வருகிறது.

தமிழ்நாடு காவல் துறை கொரோனா பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரம், உள்ளாட்சி துறை மற்றும் பிற துறைகளின் ஒருங்கிணைப்புடன் சேர்ந்து தனது முயற்சிகளை மேற்கொண்டது. பெருந்தொற்று காலத்தின்போது, அரசு வழங்கிய வழிகாட்டு நெறிமுறைகள் தவறாது கடைபிடிக்கப்பட்டு, பொது மக்கள் பாராட்டும் வகையில் அந்த வழிகாட்டுதல்களை காவல் துறை மனிதாபிமான முறையில் செயல்படுத்தியது.

**காவல் பாதுகாவலின் போது ஏற்பட்ட மரணங்கள்**

2020–ஆம் ஆண்டில், காவல் பாதுகாவலின் போது மரணம் நிகழ்ந்ததாக ஆறு வழக்குகளும், 2021–ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரை, இரண்டு வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 176 (1–ஏ)–ன்படி, அனைத்து வழக்குகள் மீதான விசாரணை நடத்தும் பொறுப்பு நீதித்துறை குற்றவியல் நடுவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் காவல் நிலைய மரணங்களைத் தடுப்பதற்காக பயிற்சி அளித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது.

## V. குற்ற நிகழ்வு நிலவரம்

### (1) பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் தடுக்கும் பிரிவு

மாநில அளவில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுக்கும்பொருட்டு தடுப்புப்பிரிவு ஒன்று

உருவாக்கப்பட்டு, அப்பிரிவு ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் இயங்கி வருகிறது. அப்பிரிவு மாவட்ட மற்றும் மாநகரக் காவல்துறையின் பணித்திறனை அதிகரித்து அவர்கள் திறம்பட செயலாற்றவும், அவர்களுக்கு சட்டபூர்வமான வழிகாட்டுதல்களை வழங்கவும், கொள்கை விவகாரங்களில் ஒருங்கிணைந்த அணுகுமுறைகளை பின்பற்றியும் செயல்பட்டு வருகிறது.

இப்பிரிவில், 2 காவல் கண்காணிப்பாளர்களும், சென்னை நகரத்தில் ஒரு துணை ஆணையரும், 4 கூடுதல் காவல் துணைஆணையர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட அளவில், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் பிற பிரிவுகளில் பதிவு செய்யப்படும் வழக்குகளை முறையாக ஆய்வு செய்ய ஒவ்வொரு மாவட்டத்திலும்/நகரத்திலும் ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்) நியமிக்கப்பட்டுள்ளனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைக் கையாள மாநில அளவில் மொத்தம் 202 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், 32 ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவுகள், 7 புலன் விசாரணை பிரிவுகள், 43 குழந்தை கடத்தல் தடுப்புப் பிரிவுகள் மற்றும் 39 சிறப்பு இளஞ்சிறார் காவல் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

சிறார்களுக்கு எதிரான குற்றங்களைக் கையாள்வதற்கு மாநிலத்தில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் 194 சிறார் நட்பு அறைகள் மற்றும் 1,542 குழந்தை நல காவல் அலுவலர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

**(2) பெண்கள் உதவி மையம்**

- தமிழகத்தின் ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் மொத்தம் 800 பெண்களுக்கான உதவி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. நிர்பயா நிதியின் மூலம் ஒவ்வொரு மையத்திற்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் மதிப்பிலான கருவிகள்

வழங்கப்பட்டு அம்மையங்கள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன.

- ❖ அனைத்து சட்டம் ஒழுங்கு மற்றும் இரயில்வே காவல் நிலையங்களிலும் பெண் புகார்தாரர்களுக்கு உதவுவதற்காக மகளிர் காவல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

**(3) பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பாக நடைபெற்ற பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்**

- ❖ குழந்தை நல காவல் அலுவலர்கள் மற்றும் இணையதளம் மூலம் கலந்தாய்வு நடத்தும் காவல் அலுவலர்களுக்கும் பயிற்சி வகுப்புகள் தவறாமல் நடத்தப்படுகின்றன.
- ❖ தமிழ்நாட்டிலுள்ள சிறார் இல்லங்கள் முறையாக இயங்குவதை உறுதி செய்ய பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்புப் பிரிவின் உயரதிகாரிகள் அவ்வில்லங்களுக்கு நேரிடையாக சென்று பார்வையிடுகின்றனர்.

## VI. போக்குவரத்து விபத்துக்கள்

சாலை விபத்துகளைத் தடுப்பது என்பது அரசின் முக்கிய குறிக்கோளாகும். பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கையால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் கவலை தரக்கூடிய விஷயமாகும். சாலை விதிகளை முறையாக பின்பற்றுவதாலும், போக்குவரத்து மேலாண்மையை நவீனப்படுத்துவதாலும் மட்டுமே சாலை விபத்துக்களை பெரிதும் தவிர்க்க முடியும் என்பதை காவல் துறை நன்கு உணர்ந்துள்ளது. தீவிர நெடுஞ்சாலை ரோந்துப் பணிகளால், சாலைப் போக்குவரத்து விதிகள் முறையாக கடைப்பிடிக்கப் படுவதை அமல்படுத்தவும், சாலைகளில் நிகழும் குற்ற நிகழ்வுகளைத் தடுக்கவும், சாலை விபத்துக்களில் பாதிக்கப்படுவோரை உடனுக்குடன் மருத்துவமனைக்கு கொண்டு சென்று உயிர்காக்கும் சிகிச்சை அளிக்கச் செய்வதைக் கவனிக்கவும் ஏதுவாகிறது.

01.01.2021 அன்றைய நிலவரப்படி, தமிழ்நாட்டில் 3.05 கோடி வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன.

இவற்றில் 2020–ஆம் ஆண்டில் மட்டும் 14.37 லட்சம் வாகனங்கள் அதிகரித்துள்ளது.

போக்குவரத்து விதிகளை மீறுபவர்களிடமிருந்து அபராதத் தொகையை வசூலிப்பதெற்கென மையப்படுத்தப்பட்ட பணமில்லா மின்–ரசீது திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் தற்போது, மாநிலம் முழுவதும் 2915 மின்–பி.ஓ.எஸ். சாதனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

விபத்துக்களின் போது சம்பவ இடத்திற்கு விரைந்து செல்லவும், பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உரிய நேரத்தில் உதவி புரியவும், தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில், தற்போது 304 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் இயங்கி வருகின்றன.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, சாலை விபத்துகள் குறித்த தரவுகளைச் சேகரித்து பகுப்பாய்வு செய்வதெற்கென உலக வங்கியின் உதவியுடன் சாலை விபத்து தரவு மேலாண்மை முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## VII. காவல்துறையில் உள்ள சிறப்புப் பிரிவுகள் – ஒரு பார்வை

காவல் துறையில் பல்வேறு சிறப்புப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் சில சிறப்புப் பிரிவுகளின் விவரம் பின்வருமாறு:–

### (i) குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை (C.B.C.I.D)

1906–ஆம் ஆண்டு குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை தொடங்கப்பட்டது. அரசு, தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அல்லது சென்னை உயர் நீதிமன்றம் ஒப்படைக்கும் வழக்குகளை புலன் விசாரணை செய்வதே, குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையின் முக்கியப் பணியாகும். குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது, சிறப்புப் புலன் விசாரணைப் பிரிவு உட்பட, தற்போது காவல்துறை இயக்குநர் (குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை) தலைமையின் கீழ் சுமார் 894 காவல் பணியாளர்களுடன் ஓர் அமைப்பாக செயல்பட்டு வருகிறது. குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையில், 37 உட்பிரிவுகளைத் தவிர, 7 திட்டமிட்ட குற்றச் செயல்கள் தடுப்புப்

பிரிவுகளும், 4 கள்ள நோட்டுக்களைக் கண்டறியும் பிரிவுகளும், 5 சிறப்புப் புலன் விசாரணைப் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. கணினிசார் குற்றத்தடுப்புப் பிரிவு, ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவு மற்றும் காவல் ஆராய்ச்சி மையம் ஆகியன இதர சிறப்புப் பிரிவுகளாகும்.

கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவு மாநில அளவில் கூடுதல் காவல்துறை இயக்குநர் தலைமையில் 3 காவல் கண்காணிப்பாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு மாநில அளவில் பதியப்பட்ட இணையதளக் குற்றங்கள் குறித்த நிலையை கண்காணிக்கும்.

மாநிலத்தில் புதிதாக 46 கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவு காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டு, 5 துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், 59 ஆய்வாளர்கள், 121 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 64 தொழில்நுட்ப உதவி ஆய்வாளர்கள் உள்பட மொத்தம் 649 காவல் பணியாளர்கள் கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவு காவல் நிலையங்களில் பணியாற்ற நியமிக்கப்பட்டுள்ளனர்.

காவல் ஆளிநர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவு சார்பில் இணையதளப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அனைத்து மாவட்டம் மற்றும் மாநகரங்களில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு இணையதளம் குறித்த விழிப்புணர்வு முகாம், அலகு அதிகாரிகளின் துணையோடு நடத்தப்படுகிறது. வங்கி மோசடி, மின்னஞ்சல் மோசடி, சமூக ஊடகம் மூலமாக நடத்தப்படும் மோசடிகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இணையதளக் குற்ற விழிப்புணர்வு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் வலைப்பின்னல் வழி முறையை (Crime and Criminals Tracking Network and Systems – CCTNS) இணையதளக் குற்றத் தடுப்புப் பிரிவு காவல் நிலையங்களில் செயல்படுத்தவும், அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களில் உள்ள கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவு காவல் நிலையங்களை Cr.P.C பிரிவு 2(எஸ்)–படி காவல் நிலையங்களாக அரசு

அறிவிப்பாணை வெளியிடவும், கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவு காவல் நிலையங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வரவும் இப்பிரிவானது உறுதியாக பாடுபடுகிறது.

அனைத்து காவல் நிலையங்கள், மண்டல இணையதள ஆய்வகங்கள் மற்றும் மாநில இணையதள ஆணை மையம் ஆகியவற்றிற்கு இணையதள தடயவியல் சாதனங்கள் கொள்முதல் செய்ய இப்பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**(ii) நுண்ணறிவுப் பிரிவு (Intelligence)**

இப்பிரிவு, பாதுகாப்பு, அமைதி மற்றும் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த தகவல்களைச் சேகரித்து, அவற்றை ஒருங்கிணைத்து பகிர்ந்தளித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இப்பிரிவில், தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, க்யூ–பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, சிறப்புப் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை மற்றும் திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு ஆகியன ஒவ்வொன்றும் ஒரு காவல்

கண்காணிப்பாளரின் தலைமையில் இயங்கி வருகின்றன.

தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது (S.B.C.I.D), இரகசிய மற்றும் மறைமுக அரசியல் நடவடிக்கைகள் மற்றும் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கக் கூடிய, மத நல்லிணக்கத்தை குலைக்க கூடிய, பல்வேறு மதத்தினர் மற்றும் சாதியினரிடையே பகைமையை தூண்டக் கூடிய வகையிலான தனி நபர்கள் மற்றும் அமைப்புகளின் சூழ்ச்சியான செயல்கள் குறித்த தகவல்களை சேகரித்தல், கண்காணித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இப்பிரிவானது, மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை பராமரிக்க ஏதுவாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைளை மாவட்ட அளவில் மேற்கொள்ளும் வகையில், சேகரித்த தகவல்களை பகுப்பாய்வு செய்து முன்கூட்டியே பகிர்ந்து வருகிறது.

பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது (Security Branch C.I.D) தமிழகத்திற்கு வருகை தரும் அயல்நாட்டு முக்கிய பிரதிநிதிகள், இதர

பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய நபர்கள் உள்ளிட்ட அதி முக்கிய / முக்கிய நபர்களுக்கான பாதுகாப்பு தவிர, தமிழ்நாட்டிலுள்ள மிக முக்கிய நபர்கள் மற்றும் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய நபர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. அதுமட்டுமின்றி, அயல் நாட்டவர் நடவடிக்கை, முக்கிய கேந்திர அமைப்புகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் கடவுச் சீட்டு தொடர்பான நடவடிக்கைகளையும் இப்பிரிவு கையாண்டு வருகிறது.

முதலமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு (Core Cell), மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் பாதுகாப்பிற்கென பிரத்யேகமாக உருவாக்கப்பட்டது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் வசிக்குமிடம், சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இடங்கள், தங்கும் இடங்கள், காவலுடன் செல்லும் வண்டித்தொடர் ஆகியவற்றின் போது, 24 மணி நேரமும் தவறு ஏதும் நிகழாமல் முழுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இப்பிரிவில், நெருங்கிய பாதுகாப்பு குழுக்கள், வெடிகுண்டைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும்

பிரிவு, மோட்டார் வாகனப் பிரிவு மற்றும் தொழில் நுட்பப்பிரிவு ஆகியன அடங்கியுள்ளன.

திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு (O.C.I.U), அமைப்பு ரீதியாக செயல்படும் குற்றவாளிகளின் குழுக்கள், போக்கிரிகள், போதை மருந்து கடத்தல், ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களைக் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லுதல், ஆட்கடத்தல், ஹவாலா பணப் பரிமாற்றம், கள்ளநோட்டு புழக்கங்கள் போன்ற நடவடிக்கைகள் குறித்து பயனுள்ள, நடவடிக்கை எடுக்கத்தக்க நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து, களப் பணியாளர்களுக்கு அத்தகவல்களைப் பகிர்ந்தளிக்கும் பணிகளை மேற்கொள்ள உருவாக்கப்பட்டது.

'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் பிரிவுகள் மாநிலம் முழுவதும் செயல்பட்டு நக்சலைட்டுகள், தீவிரவாதிகள் மற்றும் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் குறித்த நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து வருவதோடு, அத்தகைய தீய சக்திகள் மாநிலத்தில் களம் அமைக்காத

வகையில், அவர்களைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

சிறப்புப்பிரிவானது, (Special Division) மத அடிப்படைவாத அமைப்புகளைக் கண்காணித்து வருகிறது. சிறப்புப் பிரிவானது நடவடிக்கை எடுக்கத்தக்க தகவல்களைத் திரட்டி, அவற்றை உள்ளூர் காவல் துறையினருக்கு மேல் நடவடிக்கைக்காகப் பகிர்ந்தளித்து வருகிறது.

**(iii) குற்றப்பிரிவு**

குற்றப் பிரிவானது, போதைப் பொருள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு மற்றும் அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

போதைப் பொருள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு போதைப் பொருள் கடத்தல் குறித்த நுண்ணறிவுத் தகவல்களை சேகரிப்பதுடன் 1985 ஆம் ஆண்டைய போதை மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தை மாநிலத்தில் அமல்படுத்தி வருகிறது.

தற்போது, மாநிலம் முழுவதும் இப்பிரிவின் 15 அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

1985–ஆம் ஆண்டு போதைப் பொருட்கள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தைத் திறம்பட செயல்படுத்துவதற்காக அனைத்து அலகுகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

கல்வி நிறுவனங்களில் போதைப் பொருட்கள் புழக்கம் இல்லாமல் பார்த்துக்கொள்ளும் வண்ணம் தங்கள் பகுதிகளில் போதைப் பொருட்கள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தைத் திறம்பட செயல்படுத்துவதற்காக போதைப் பொருள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவு பிரிவின் அலகு அதிகாரிகள் அக்கல்வி நிறுவனங்களுக்கு சென்று கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

காணொளி திருட்டுத் தடுப்புப் பிரிவு என்ற ஒரு தனிப்பிரிவு காணொளித் திருட்டைத் தடுப்பதற்காகவும், பதிப்புரிமைச் சட்ட மீறலைக் கண்காணிப்பதற்காகவும் தொடங்கப்பட்டது. தமிழக அரசால் இப்பிரிவின்

பெயரானது "அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு" என மாற்றி ஆணையிடப்பட்டது. சென்னையில் 3 பிரிவுகள், மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், கடலூர், விருதுநகர் மற்றும் திண்டுக்கல் என மொத்தம் 12 இடங்களில் இப்பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

**(iv) பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு**

பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவின் ஒரு அங்கமாக வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு செயல்பட்டு வருகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் நிதி முறைகேடு தொடர்பான குற்றங்களை விசாரிப்பதற்காக ஒரு சிறப்புப் பிரிவாக வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு 1971–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவின் மற்றொரு அங்கமாக சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவு 1983–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இப்பிரிவானது, கூடுதல் காவல்துறை இயக்குநரின் கீழ்

செயல்பட்டு வருகிறது. சிலை திருட்டு தடுப்புப் பிரிவானது (1) தொன்மை வாய்ந்த சிலைகள் திருட்டு, (2) 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமை வாய்ந்த சிலைகள் திருட்டு, (3) மாநிலம் முழுவதும்/மாநிலங்களுக்கு இடையேயும் தொடர்புடைய சிலைத் திருட்டு வழக்குகள், (4) ரூபாய் 5 இலட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட விலை மதிப்புள்ள சிலைகள் திருட்டு மற்றும் (5) பதற்றத்தை உருவாக்கக் கூடிய சிலைகள் திருட்டு மற்றும் மாநில அரசின் ஆணையின் பேரிலான சிலைத் திருட்டு வழக்குகளை புலன் விசாரணை செய்து வருகிறது.

பழமை வாய்ந்த சுவாமி சிலைகள் பல புராதான கோவில்களில் இருக்கின்றன. இதுபோன்ற கோவில்களை அடையாளம் கண்டு, அக்கோவில்களில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, தமிழகத்தின் பழமைவாய்ந்த சிலைகள் மற்றும் கலைப்பொருட்கள் திருடப்படுவதைத் தடுப்பதற்காக சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு–2, வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் ஆகியவற்றால் நடைபெறும் மோசடிகள், குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் புலன் விசாரணை செய்யும் முக்கியப் பணியினை மேற்கொண்டு வருகிறது. மேலும், இப்பிரிவு, 1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிறுவன முதலீட்டாளர்கள் நலன் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளையும் கையாண்டு வருகிறது. இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில்தான் இத்தகைய சிறப்பு சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

**(v) மாநில குற்ற ஆவணக் காப்பகம்**

காவல் துறையின் செயல் திறனை மேம்படுத்தவும், குற்ற ஆவண முறைமையை மேம்படுத்தவும், தமிழ்நாட்டில் மாநில குற்ற ஆவண காப்பகம் உருவாக்கப்பட்டது. மாநில குற்ற ஆவணக் காப்பகத்தின் கீழ், காவல் கணினிப் பிரிவு, விரல் ரேகைப் பதிவுக் கூடம், குற்றச் செயல்முறை கண்டறியும் பிரிவு மற்றும் புள்ளியியல் பிரிவு ஆகியன செயல்படுகின்றன.

மேலும் இப்பிரிவு குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழிமுறைக்கான இணைப்பு அமைப்பாகவும் செயல்பட்டு வருகிறது.

காவல் கணினி பிரிவு 1971ஆம் ஆண்டு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் அமைக்கப்பட்டது. இதன் நோக்கம் அனைத்து குற்றம் மற்றும் குற்றவியல் தரவுகளை பதிவு செய்தல், புலன் விசாரணைக்கு உதவி செய்தல் மற்றும் குற்றப் பகுப்பாய்விற்காக புள்ளி விவரங்களை சேகரித்தல் ஆகியவையாகும்.

**1. குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழிமுறை (சிசிடிஎன்எஸ்)**

11–வது ஐந்தாண்டு திட்டத்தின் ஒரு பகுதியாகத் தேசிய மின்–ஆளுமை திட்டத்தின் கீழ் குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழி முறை (Crime and Criminals Tracking Network and Systems – CCTNS) என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின்–ஆளுமைக் கோட்பாடுகளைப் பின்பற்றி காவல்துறையின் திறமை மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்தி, குற்றங்கள் மற்றும்

குற்றவாளிகள் குறித்த தரவுகளை சேகரிப்பதற்காக விரிவான மற்றும் ஒருங்கிணைப்பு முறையை உருவாக்குதல், நாடு தழுவிய வலைப்பின்னல் கட்டமைப்பை உருவாக்குதல் ஆகியன இம்முறைமையின் நோக்கங்களாகும். இத்திட்டமானது தமிழ்நாட்டில், 1,541 காவல் நிலையங்களிலும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு, குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை போன்ற 372 சிறப்பு அலகுகளிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

i. இணையவழி புகார் பதிவு செய்யும் வசதி வலைதளத்தில் அறிமுகப் படுத்தப்பட்டு உள்ளதால், தற்போது குடிமக்கள் இணையவழி வாயிலாக புகார்களை அனுப்பலாம். புகார் பதிவு செய்யப்பட்டவுடன், ஒரு ஒப்புகை எண் வழங்கப்படும். இவ்வாறு இணைய தளத்தில் பதிவு செய்த தமது இணையவழி புகாரின் நிலையை குடிமக்கள் இணைய தளத்திலேயே அறிந்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், புகார் பதிவு செய்யப்பட்டவுடனும், அதற்கான தீர்வு காணப்பட்டவுடனும் புகார்தாரருக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பப்படுகிறது. இணையதளத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்தான பின்னூட்டத்தையும் குடிமக்கள் கொடுக்கலாம். இதுவரை, 1,60,507 இணையவழி புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ii. தமிழ்நாடு காவல் இணையமுகப்பு வாயிலாக குடிமக்களுக்கு "வாகன தேடுதல்" வசதி வழங்கப்பட்டுள்ளது. யாராவது பழைய வாகனத்தை வாங்க விரும்பினால், தாங்கள் வாங்கும் வாகனம் திருடப்பட்டதா அல்லது ஏதாவது ஒரு குற்ற வழக்கில் சம்பந்தப்பட்டதா என கண்டறிய இவ்வசதியை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வசதியை காவல்துறையும் பயன்படுத்தி வருகிறது.

iii. மின்ஆளுமை முயற்சியின் ஒரு பகுதியாக, "தமிழ்நாடு காவல்–குடிமக்களுக்கான சேவைகள்" என்ற பெயரில் ஆண்ட்ராய்டு கைபேசி செயலி

ஒன்றின் மூலம் பின்வரும் 5 சேவைகள் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன:–

அ) இணையவழி புகார் பதிவு

ஆ) வாகன விவரம்

இ) முதல் தகவல் அறிக்கை விவரம்

ஈ) சமுதாய பணிப் பதிவேடு விவரம்

உ) இணையவழி புகார் விவரம்

இந்த செயலியை குடிமக்கள் "Google Play Store" லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

iv. உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி குடிமக்கள் தமிழ்நாடு காவல் இணையதள முகப்பில் முதல் தகவல் அறிக்கைகளை பார்வையிடும்/ பதிவிறக்கம் செய்துகொள்ளும் வசதி 15.11.2016 முதல் செய்து தரப்பட்டுள்ளது.

v. பின்வரும் சேவைகள் குறித்து குடிமக்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படுகிறது:

அ) இணையவழி புகார்கள் பதிவு மற்றும் அதற்கான இறுதித் தீர்வு

ஆ) முதல் தகவல் அறிக்கைகளுக்கான இறுதியான விவரம்

இ) சமுதாய பணிப் பதிவேடு பதிவுக்கான விசாரணை முடிவு

ஈ) எதிரிகள் கைது குறித்து அவர்களின் உறவினர்களுக்கு தெரிவித்தல்

உ) விபத்து வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல்

ஊ) சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்புதல்

vi. நீதிமன்றங்கள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் குடிமக்களுடன் சாலை விபத்து ஆவணங்களை பகிர்ந்துகொள்ளுதல்:

இழப்பீட்டு தீர்ப்பாயங்கள், காப்பீட்டு நிறுவனங்கள், பாதிப்படைந்தோர் மற்றும் எதிரிகள் போன்ற அனைத்து சம்பந்தப்பட்டவர்களுடன் சாலை விபத்து குறித்த ஆவணங்களை பகிர்ந்துகொள்ள வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் காவல்துறைக்கு உத்தரவிட்டதையடுத்து, சாலை விபத்து வழக்குகள் தொடர்பான ஆவணங்களை பகிர்ந்துகொள்ள இணையவழி வசதி ஒன்றை தமிழ்நாடு காவல்துறை உருவாக்கியது. சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தங்களது

இழப்பீடுகளை விரைவில் பெற உதவி செய்வதே இதன் நோக்கமாகும்.

தமிழ்நாடு காவல்துறை G2G (அரசிடம் இருந்து அரசு), G2B (அரசிடம் இருந்து வர்த்தகம்) மற்றும் G2C (அரசிடம் இருந்து குடிமக்கள்) போன்ற அனைத்து வகையான மின்–ஆளுமை சேவைகளையும் அமல்படுத்தியுள்ளது.

vii. காணாமல்போன ஆவணங்களின் அறிக்கை: பின்வரும் காணாமல்போன ஆவணங்கள் குறித்து குடிமக்கள் இணையவழியில் புகார் செய்யலாம்:

1. கடவுச்சீட்டு
2. வாகன பதிவு சான்றிதழ்
3. ஓட்டுநர் உரிமம்
4. பள்ளி/கல்லூரி சான்றிதழ்
5. அடையாள அட்டை

புகார் பதிவு செய்யப்பட்டவுடன், காணாமல்போன ஆவண அறிக்கை ரூ.50 கட்டணத்தில் உடனடியாக அளிக்கப்படும். காணாமல் போன ஆவணத்தின் நகலைப் பெறுவதற்காக இந்த அறிக்கையை

சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் சமர்ப்பிக்கலாம். இதுவரை, இவ்வசதி மூலம் 2,05,817 காணாமல் போன ஆவணங்கள் குறித்த அறிக்கைகள் குடிமக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

## 2. காவல் அலுவலர்களுக்கு புலன் விசாரணை மற்றும் உள்ளூர் காவல்துறையினருக்கு உதவிடும் வகையில் இணையவழி வசதிகள் செய்யப்பட்டுள்ளதன் பயன்பாடு

**காவல் நிலைய அளவிலான அலுவலர்களுக்கு கைபேசி செயலி**:

இச்செயலியானது, காவல் நிலைய அளவிலான அலுவலர்கள் குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல்களை தெரிந்து கொள்வதற்கு, அவர்கள் வெளியில் சென்று கொண்டிருக்கும்போதும், அதனை பெறுவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது. ஆவணங்களை எண்மத்தரவாக (Digital Data) மாற்றியதாலும், இதற்கான கைபேசி செயலி உருவாக்கப்பட்டதாலும், இப்போது காவல்துறை அதிகாரிகளால் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் தேடுதல் வேட்டை மற்றும் விசாரணையை எளிதாகவும், திறம்படவும் மேற்கொள்ள முடிவதுடன், அவற்றை

அவர்களின் புலன் விசாரணைக்கு பயன்படுத்திக்கொள்ள உதவுகின்றன. காவல் நிலைய அளவிலான அலுவலர்கள் இந்தச் செயலியை தாங்கள் வாகன சோதனைகள், ரோந்து சுற்றுக்காவல் மற்றும் பிற காவல் செயல்பாடுகளில் ஈடுபடும்போது, விரிவான வகையில் பயன்படுத்தி வருகின்றனர்.

குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் முறையிலான தரவுகளை பயன்படுத்தி இதுநாள் வரை 1033 திருட்டுபோன வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

**தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் கண்டுபிடிக்கப்பட்ட காணாமல் போன நபர்கள்**

மாநிலம் முழுவதும் உள்ள உரிமம் பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் தங்கியுள்ள மனவளர்ச்சி குன்றிய நபர்களின் விவரங்கள் குடிமக்களின் பார்வைக்காக வெளியிடப்பட்டுள்ளது.

**கைது செய்யப்பட்ட நபர்களின் விவரங்கள்**

மாநிலம் முழுவதும் உள்ள காவல்நிலையங்களில் கைது செய்யப்பட்டவர்களின் விவரங்களை குடிமக்கள்

பார்வையிடலாம். இவ்வசதி தமிழ்நாடு காவல் வலைதளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**இணையவழி காவல் சரிபார்ப்பு அறிக்கை:**

சுய-சரிபார்ப்பு, பணியாளர்கள் சரிபார்ப்பு, வாடகைக்கு குடியிருப்போர் மற்றும் வீட்டு வேலைக்கான பணிசெய்வோர் குற்றப்பின்னணி சரிபார்ப்பு ஆகியவற்றிற்காக குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழி முறை தளத்தில் "காவல் சரிபார்ப்பு சேவைகள்" வழங்கப்பட்டுள்ளன. சுய, குடியிருப்போர் மற்றும் வீட்டு வேலைக்காரர் சரிபார்ப்பு ஆகிய சேவைகளைப் பெற குடிமக்கள் ரூ.500-ம், வேலைக்காரர் சரிபார்ப்பிற்காக தனியார் நிறுவனங்கள் ரூ.1,000-ம் நபர் ஒருவருக்கு செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

**காவல் சரிபார்ப்பு சேவைகளின் சிறப்புக்கூறுகள்:**

- குடிமக்கள் மற்றும் காவல் துறையினரின் பணியை எளிமையாக்குவதற்காக அனைத்து செயல்பாடுகளும் தானியங்கி மயமாக்கப்பட்டுள்ளன.
- விண்ணப்பதாரர் காவல் நிலையத்திற்கு செல்லத் தேவையில்லை.

- அற்ப காரணங்களுக்காக செய்யப்படும் விண்ணப்பங்களை தவிர்ப்பதற்காக, சரிபார்ப்பு செய்யப்பட வேண்டிய நபரிடமிருந்து இசைவு கடிதம் ஒன்றை பெறும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- இணையவழியில் பெறப்படும் காவல் சரிபார்ப்பு அறிக்கையின் உண்மைத் தன்மையை சரிபார்ப்பதற்காக QR கோடு வடிவிலான குறியீடு (விரைவுத் தகவல் குறியீடு) அனைத்து காவல் சரிபார்ப்பு அறிக்கைகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இக் குறியீட்டை அதற்குரிய கருவியில் படித்துப் பார்த்தால், அந்த காவல் சரிபார்ப்பு அறிக்கையின் உண்மைத்தன்மையை உறுதிசெய்து கொள்ளலாம். மேலும், காவல் சரிபார்ப்பு அறிக்கையின் நம்பகத்தன்மையை சோதனையிட 'சரிபார்' என்ற தேர்வும் வலைதளத்தில் வழங்கப்பட்டுள்ளது.

## காணாமல்போன நபர்களை தேடும் முறைமை

காணாமல்போன நபர்கள் மற்றும் அடையாளம் தெரியாத உடல்களை இணையதளத்தில் கிடைக்கும் தரவுகளின் உதவியுடன் கண்டுபிடிக்க விசாரணை அதிகாரிகளுக்கு உதவுவதற்காக காணாமல்போன நபர்களை தேடும் அதி நவீன தேடுதல் முறைமை உருவாக்கப்பட்டுள்ளது.

## வெளியீடுகள்

மாநில குற்ற ஆவணக் கூடம் 'தமிழ்நாடு குற்ற ஆய்வு' என்ற தலைப்பில் ஒவ்வொரு ஆண்டும் பிரசுரம் ஒன்றை வெளியிட்டு வருகிறது. இக்கூடம் மாநிலத்தைப் பொறுத்தவரையிலான மாதாந்திர குற்றப் புள்ளி விவரங்களை ஒவ்வொரு மாதமும் பிரசுரித்து வருகிறது.

## "வாகன் சமன்வே" முறையின் கீழ் கண்காணிப்பு மேற்கொள்ளுதல்

இம்முறையின்கீழ் ஒரு குறிப்பிட்ட வாகனம் திருடப்பட்டுள்ளதா அல்லது மீட்கப்பட்டுள்ளதா என்பதை பொதுமக்கள் அறிந்து கொள்ள இயலும். நாடு

முழுவதிலுமுள்ள வாகனத்தின் உரிமையாளர் விவரம் குறித்தும் காவல் துறையினர் கண்டறிய முடியும்.

**(vi) குற்றச் செயல் முறையைக் கண்டறியும் பிரிவு**

இப்பிரிவானது, குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து, அவற்றைப் புலன் விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கு பகிர்ந்தளிக்கிறது. காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களையும் இப்பிரிவு சேகரிக்கிறது. குற்றச் செயல்முறையைக் கண்டறியும் பிரிவானது பல்வேறு தலைப்புகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றங்கள் பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுத்து அவற்றை தேசிய குற்ற ஆவணக் கூடத்திற்கு அனுப்புகிறது.

**(vii) விரல் ரேகை பதிவுக் கூடம்**

1895–ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்ட தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கூடம்,. உலகிலேயே மிகப் பழமையான கூடங்களில் ஒன்றாகும். விரல் ரேகைப் பதிவுகள் அடங்கிய சேமிப்புக் கிடங்காக இக்கூடம் திகழ்கிறது. இதில், 2,04,839 தண்டனை பெற்ற நபர்களின் விரல் ரேகைப் பதிவுகள்

பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கூடமானது, நீதிமன்றங்கள் மற்றும் பிறதுறையினரால் வல்லுநர் கருத்துக்காக அனுப்பப்படுகின்ற ஐயத்திற்குரிய ஆவணங்களின்மீது காணப்படும் விரல் ரேகைப் பதிவுகளைக் கூர்ந்தாய்வு செய்யும் பணிகளையும் மேற்கொண்டுவருகிறது.

தனி விரல் ரேகைப் பதிவுக் கூடப் பணியாளர்களின் முக்கியப் பணியானது குற்றச் சம்பவ இடங்களுக்குச் சென்று குற்றவாளிகள் விட்டுச் சென்ற தடயப் பதிவுகளைச் சேகரிப்பதாகும். இந்த விரல் ரேகைப் பதிவுகள், நீக்கம் செய்யப் படுவதற்காக குற்ற நிகழ்வு நடந்த வீட்டில் இருப்பவர்களின் விரல் ரேகைப் பதிவுகளோடு ஒப்பீடு செய்யப்பட்டு, மீதமுள்ள விரல் ரேகைப் பதிவுகள் நிலவரப்படுத்தப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலுள்ள விரல்ரேகைப் பதிவு பிரிவுகளோடும் நீட்டிக்கப்பட்டுள்ள விரல் ரேகை பகுப்பாய்வு மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறைமையின் (FACTS) 7–வது பதிப்பு தரவுத்தளத்தில் சரிபார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டில், மொத்தம் 39 தனி விரல் ரேகைப் பதிவுக் கூடங்கள் இயங்கி வருகின்றன. மேலும் சிறப்புப் பிரிவுகளான வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு மற்றும் ஊழல் ஒழிப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு ஆகியவற்றிலும் செயல்பட்டு வருகிறது.

**(viii) தமிழ்நாடு சிறப்பு காவல் படை அணிகள்**

தமிழ்நாடு சிறப்பு காவல் படை அணியில் ஆயுதப்படை காவல் பயிற்சியகம் மற்றும் படைக்கல மையம் தவிர 15 அணிகள் உள்ளன.

**(ix) செயலாக்கப் பிரிவு**

இப்பிரிவில், தமிழ்நாடு அதிரடிப்படை, அதிரடிப்படைப் பயிற்சி பள்ளி, வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பிரிவு மற்றும் மோப்ப நாய்ப்படைப் பிரிவு ஆகியன அடங்கும். பல்வேறு தேவைகளுக்காக சிறப்பு பயிற்சி பெற்ற ஆளிநர்களை (அதிரடிப்படை வீரர்கள்) தயார் நிலையில் வைத்திருப்பது மற்றும் பயிற்சி அளிப்பது போன்ற தேவைகளை இப்பிரிவு கவனித்து வருகிறது.

சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக "துரித நடவடிக்கை படையினருக்கு" சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு படை மற்றும் மத்திய தொழில் பாதுகாப்பு படை போன்ற துணை இராணுவத்தினர் அளிக்கும் உளவு ஒத்திகை நடவடிக்கைகளில் துரித நடவடிக்கை படையினர் ஈடுபட்டு வருகின்றனர். 2020-ம் ஆண்டில், இத்தகைய துரித நடவடிக்கை படையானது, தனியாக 18 இடங்களிலும், மத்திய தொழில் உளவு படையுடன் இணைந்து 2 இடங்களிலும் உளவு பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட்டது. இதே போன்று, இப்படையானது, தனியாக மூன்று இடங்களிலும், மத்திய தொழில் பாதுகாப்பு படையுடன் இணைந்து மூன்று இடங்களிலும் பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை மற்றும் உளவு ஒத்திகையிலும் ஈடுபட்டுள்ளது.

சிறப்பு பாதுகாப்பு குழு மாற்றியமைக்கப்பட்டு, தமிழ்நாடு அதிரடிப்படை மற்றும் தமிழ்நாடு அதிரடிப்படைப் பள்ளி ஆகிய பிரிவுகள்

உருவாக்கப்பட்டன. தமிழ்நாடு அதிரடிப்படை மற்றும் தமிழ்நாடு அதிரடிப்படைப் பள்ளி ஆகியன கூடுதல் காவல்துறை இயக்குநர், செயலாக்கம், அவர்கள் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அதிரடிப் படையானது, பயங்கரவாதிகளுக்கு எதிரான செயல்பாடுகளுக்காக முதன்மையாக பயன்படுத்தப்பட்டு வரும் படையாகும்.

பேரிடர் மேலாண்மை நிவாரணம் மற்றும் மீட்பு ஆகியன இயற்கை மற்றும் மனிதர்களால் நிகழ்த்தப்படும் பேரிடர் காலங்களில் எந்த ஒரு அரசாங்கத்திற்கும் பெரிய கவலையளிக்கும் நிகழ்வாக இருந்து வருகிறது.

தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை படையை பலப்படுத்தவும், அதன் சேவைகளை பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 13–ஆம் அணி 'தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை படை' என மறு பெயராக்கம் செய்யப்பட்டு, கூடுதல் காவல் துறை இயக்குநர், செயலாக்கம் அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை படை மற்றும் தமிழ்நாடு அதிரடிப்படை பயிற்சியாளர்கள் பேரிடர் மேலாண்மைக்கான அம்சங்கள் குறித்த பயிற்சிகளை 12 கடலோர மாவட்டங்கள் மற்றும் சென்னை நகரிலுள்ள காவல் ஆளிநர்களுக்கு அளித்து வருகின்றனர்.

தமிழ்நாடு அதிரடிப் படை பள்ளியில் மோப்ப நாய்ப்படை பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. 2020–ஆம் ஆண்டில், நாசவேலை தடுப்புச் சோதனைகள் மற்றும் குண்டு வெடிப்பு குறித்த தொலைபேசி மிரட்டல்கள் போன்ற 1,098 நிகழ்வுகளில், மோப்பநாய்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

2020ம் ஆண்டில், தமிழ்நாடு அதிரடிப்படை பள்ளியானது, தமிழ்நாடு காவல் ஆளிநர்கள் மற்றும் இதர மாநிலங்கள் மற்றும் துறைகளின் காவல் ஆளிநர்களுக்கு 62 பயிற்சிகளை அளித்துள்ளது.

**(x) சிறப்பு இலக்குப் படை**

சிறப்பு இலக்குப் படையானது தற்போது காவல்துறை தலைவரின் கீழ் செயல்பட்டு வருகிறது.

ஆயுதம் ஏந்திய போராளிகள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக திறமையாக செயல்பட சிறப்பு இலக்குப் படையினர் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும், இப்படையானது, பேரிடர் காலங்களிலும், மீட்பு நடவடிக்கைகளிலும் உள்ளூர் காவல் துறையினருக்கு உறுதுணையாக திகழ்கின்றது.

தற்போது சிறப்பு இலக்குப் படையானது, மாவோயிஸ்ட்டுகளின் நடவடிக்கைகளை தமிழ்நாட்டின் மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ள பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளில் கண்காணிப்பு செய்து வருகின்றது.

**(xi) கடலோரப் பாதுகாப்புக் குழுமம்**

தமிழ்நாடு, 13 கடலோர மாவட்டங்கள் மற்றும் 591 மீனவ கிராமங்களை உள்ளடக்கிய 1,076 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கடலோர எல்லைப் பகுதியைக் கொண்டுள்ளது. கடலோர பாதுகாப்புக் குழுமம், கடல்சார் காவல்நிலையங்கள், கடல் சார் புறக்காவல் நிலையங்கள் மற்றும் சோதனைச் சாவடிகள் அமைத்தல் போன்றவற்றிற்காக பல்வேறு திட்டங்களைச்

செயல்படுத்தி வருகிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு:–

ஒன்றிய அரசின் கடலோரப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 12 கடல்சார் காவல் நிலையங்கள், 12 கடல்சார் புறக்காவல் மற்றும் 40 கூடுதல் சோதனைச் சாவடிகள் அமைக்க ஒன்றிய அரசு நிதி ஒதுக்கியுள்ளது. மேலும், இலகுரக இயந்திர துப்பாக்கி (LMG), இந்திய சிறு ஆயுத முறை (INSAS) துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கிகள் போன்றவற்றுடன் கூடிய 12 டன் திறன் கொண்ட 12 படகுகளும் மற்றும் 5 டன் திறன் கொண்ட 12 படகுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதன் இரண்டாம் கட்டத்தின் கீழ், 30 கடல்சார் காவல் நிலையங்களுக்கு வாகனங்கள் மற்றும் சாதனங்கள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டன. கடலோர பாதுகாப்பு குழுமத்தின் படகுகளை நிலைநிறுத்த ரூ.50 லட்சம் செலவில் ஐந்து இடங்களில் கட்டுமானம் முடிக்கப்பட்டு, பிற இடங்களில் கட்டுமானம் நடைபெற்று வருகிறது.

எர்ணாவூர், கன்னியாகுமரி மீன்பிடி துறைமுகம் மற்றும் கடலூர் மாவட்டம் அண்ணன்கோவில் ஆகிய இடங்களில் படகுதளம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நாகப்பட்டினம் மாவட்டம் ஆற்காட்டுத்துறை, புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டிணம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் தருவைக்குளம் ஆகிய இடங்களில் மூன்று படகுதளம் அமைக்கும் பணிகள் ஒன்றிய அரசிடமிருந்து நிதி பெற்றவுடன் தொடங்கப்படும்.

மூன்றாம் கட்ட கடலோர பாதுகாப்புத் திட்டத்திற்காக ரூ.404 கோடி வழங்கிட கோரும் கருத்துரு ஒன்று ஏற்கனவே ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பாதிப்புக்கு உள்ளாகும் மீனவர்கள் மற்றும் கடலோர பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களை பெறுவதற்காக கட்டணமில்லா தொலைபேசி எண் 1093, நாள் முழுவதும் செயல்பட்டு வருகிறது.

கடல்சார் காவலர்கள் தீவிரமாக தமிழகத்தின் கடலோர பகுதிகளில் FIB(எஃப்ஐபி) ATV மற்றும் (ஏடிவி)

படகுகளில் ரோந்து பணியை மேற்கொண்டு, கடல்சார் சூழலியல் முறை பாதுகாப்புக்கு பெரிதும் பங்களிப்பு செய்துள்ளனர்.

கடலோரப் பாதுகாப்பு குழுவினர், கடந்த ஆண்டில் இந்திய கடவுச் சீட்டு சட்டம் 1967, வெளிநாட்டினர் சட்டம் 1946, ஆயுதச்சட்டம், 1959, வெடி மருந்துப் பொருள் சட்டம் 1908 மற்றும் இந்திய கடல்வழி மண்டல (மீன்பிடி படகுகள் ஒழுங்குமுறை) சட்டங்கள் 1981 ஆகிய கடல் வழிச் சட்டங்கள் மற்றும் பிற சட்டங்களின் கீழ் 140 வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

கடலோர பாதுகாப்புப் பயிற்சிகள் ஆறு மாதத்திற்கு ஒருமுறை கடலோரப் பகுதிகளில் பல்வேறு நிகழ்வுகளின்போது, பாதுகாப்பு தயார் நிலையில் உள்ள குறைபாடுகளை கண்டறியவும் மற்றும் கடலோர பகுதிகளில் தயார் நிலையில் இருப்பதற்காகவும் நடத்தப்படுகிறது. 2020ம் ஆண்டில் இந்திய கடற்படையினரால் கடலோர பாதுகாப்பு தற்காப்பு பயிற்சி மற்றும் சாகர் காவாச்–1/ 2019–2020 ஆகியவை முறையே 06.02.2020 மற்றும் 07.02.2020 அன்று

மேற்கொள்ளப்பட்டது. 80 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட சிவப்புப் படையினரை நீலப் படையினர் வெற்றிகரமாக தடுத்து நிறுத்தினர்.

**(xii) இரயில்வே காவல்படை**

சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி இரயில்வே காவல் மாவட்டங்களில், மொத்தம் 7 உட்கோட்டங்களில், 47 இரயில்வே காவல் நிலையங்களும் 15 காவல் வட்டங்களும், 10 இரயில்வே புறக்காவல் நிலையங்களும் உள்ளன. இரயில் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைதியை நிலை நாட்டவும், குற்றங்களைத் தடுக்கவும் மாவட்ட காவல் துறையினருடன் இணைந்து இரயில்வே காவல் படையானது செயலாற்றி வருகிறது.

**(xiii) சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவு**

1955–ஆம் ஆண்டு குடிமையியல் உரிமை பாதுகாப்புச் சட்டம், 1989–ஆம் ஆண்டு பட்டியலினத்தவர் / பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் மற்றும் 2014–ம்

ஆண்டு பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்பு திருத்தச் சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தும் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவானது தற்போது கூடுதல் காவல்துறை இயக்குநரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. 1972–ஆம் ஆண்டு உருவான இப்பிரிவு, காவல் மாவட்டங்களிலும், காவல் ஆணையரகங்களிலும் சமூக நீதி மற்றும் மனித உரிமைகளின் செயல்பாடுகளை கண்காணித்து வருகிறது.

2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கடைசி வாரத்தில் மாவட்ட நிர்வாகத்தினரால், காவல் அலுவலர்களோடு சேர்ந்து தமிழகத்திலுள்ள வன்கொடுமை பாதுகாப்புக்குள்ளாகக்கூடிய கிராமங்களில் சாதி நல்லிணக்க வாரம்கடைபிடிக்கப்பட்டது.

வன்கொடுமையினால் பாதிப்புக்கு உள்ளாகும் கிராமங்களைக் கண்டறியும் கணக்கெடுப்புப் பணியை சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவினர் மேற்கொள்கின்றனர். வன்கொடுமையைத் தடுப்பதற்கான

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இது உறுதுணையாக அமைகிறது. அத்தகைய முறையில், 372 கிராமங்கள் வன்கொடுமை நிகழ வாய்ப்புள்ள கிராமங்களாகவும், 307 கிராமங்கள் வன்கொடுமை நிகழ வாய்ப்பு இல்லாதவையாகவும் கண்டறியப்பட்டன. வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு, மாவட்ட ஆட்சியர்கள் நிதி நிவாரணம் அளிப்பது குறித்த கருத்துருக்களையும் இப்பிரிவினர் கண்காணித்து வருகின்றனர்.

**(xiv) காவல் பணிக்கு உதவிடும் துணைப் பிரிவுகள்**

**மோப்ப நாய்ப் படை**

குற்ற வழக்குகளில் பயிற்சி அளிக்கப்பட்ட மோப்ப நாய்களின் மூலம் தடயங்களை கண்டறிய காவல் துறையினருக்கு இப்பிரிவு உதவுகிறது. அதே போன்று வெடிமருந்துகள் மற்றும் போதைப்பொருட்கள் ஆகியவற்றைக் கண்டுபிடிக்கவும் மோப்ப நாய்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. அனைத்து மாவட்டங்களிலும், ஆணையரகங்கள் மற்றும் சிறப்பு இலக்குப்படை, இரயில்வே காவல் படை, அதிரடிப்படை

ஆகிய சிறப்பு பிரிவுகளிலும் தமிழ்நாடு காவல்துறையின் மோப்ப நாய்ப் படை பிரிவுகள் உள்ளன. மாநிலத்தில் இப்பிரிவில் மொத்தம் 191 மோப்ப நாய்கள் உள்ளன. அவற்றில், 80 மோப்ப நாய்கள் குற்றவாளிகளைக் கண்டறியவும், 99 மோப்பநாய்கள் வெடிமருந்துகளை கண்டுபிடிக்கும் பணியிலும், 7 மோப்ப நாய்கள் போதைப்பொருட்களை கண்டுபிடிக்கும் பணியிலும், 3 மோப்ப நாய்கள் மீட்புப் பணியிலும் 2 மோப்ப நாய்கள் இதர வகை பணியிலும் ஈடுபடுத்தப்படுகின்றன.

**குதிரைப் படை**

காவல் துறை குதிரைப் படையானது, கூட்டங்களைக் கட்டுப்படுத்தவும், குடியரசு தினவிழா மற்றும் சுதந்திர தினவிழா போன்ற சிறப்புக்கால நிகழ்வுகளின் போதும் ஈடுபடுத்தப்படுகிறது. தற்போது, இப்படையிலுள்ள குதிரைகளின் எண்ணிக்கை 37 ஆகும் (30.06.2021 அன்றுள்ளபடி).

இப்படை, சென்னை மற்றும் மதுரை மாநகரங்களிலுள்ள பண்டிகைகள் / ஊர்வலங்கள், பெரிய

அளவிலான விளையாட்டு போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளின் போது பணியாற்றுகிறது.

**(xv) காவல் பயிற்சி**

1896–ஆம் ஆண்டுக்கு முன்னரே வேலூரில் துவங்கப்பட்ட காவலர் பயிற்சிப் பள்ளி, 1905–ஆம் ஆண்டில் காவலர் பயிற்சி கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது. தற்போது, அது காவல் உயர் பயிற்சியகமாகத் தரம் உயர்த்தப்பட்டு, வண்டலூர் அருகில் உள்ள ஊனமாஞ்சேரியில் செயல்பட்டு வருகிறது. காவல் உயர் பயிற்சியகமானது, உதவி ஆய்வாளர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட நிலை அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கக்கூடிய முதன்மை காவல் பயிற்சி நிறுவனமாகும்.

2020–ம் ஆண்டு தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் வழங்கப்பட்ட 14 பயிற்சி வகுப்புகளில் உதவி ஆய்வாளர்கள் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் வரையான காவல் அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் 455 பேர்களுக்கு குறுகிய கால வகுப்புகள் கொண்ட பயிற்சி

நடத்தப்பட்டது. இதுதவிர, நேரடி நியமனம் செய்யப்பட்ட காவல் துணை கண்காணிப்பாளர்கள் 30 பேருக்கும், உதவி ஆய்வாளர்கள் (விரல் ரேகைப் பிரிவு) 9 பேருக்கும் அடிப்படை பயிற்சி வழங்கப்பட்டது.

புதிதாக தேர்வு செய்யப்பட்ட 86 காவல் துணை கண்காணிப்பாளர்கள் '(வகை 1) மற்றும் 3 காவல் உதவி ஆய்வாளர்கள் (தொழில் நுட்பம்) ஆகியோருக்கு அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திருவள்ளூர், விழுப்புரம், மேட்டூர் மற்றும் மதுரை ஆகிய எட்டு நிரந்தர காவலர் பயிற்சி பள்ளிகளின் பயிற்சி நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் தலைமையிடமாகச் சென்னை அசோக் நகரிலுள்ள காவலர் பயிற்சி கல்லூரி செயல்பட்டு வருகிறது. இது தவிர, ஒவ்வொரு சரகம் / நகரங்களில் செயல்பட்டு வரும் 13 பணியிடை பயிற்சி மையங்களும், காவல்துறை இயக்குநர், பயிற்சி அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

## (xvi) தொழில்நுட்பப் பணிகள்

தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் கணினிகளைப் பராமரித்தல், புதிய திட்டங்கள் அமலாக்கம் மற்றும் தொழில்நுட்பக் கருவிகளை ஆய்வு மற்றும் மதீப்பீடு செய்தல் போன்ற பணிகளை தொழில் நுட்பப் பணிகள் பிரிவினர் கவனித்து வருகின்றனர். இப்பிரிவில், தொழில்நுட்பப் பிரிவு மற்றும் செயலாக்கப் பிரிவு ஆகிய இரண்டு உட்பிரிவுகள் உள்ளன. தகவல் பரிமாற்றத்திற்காக, அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் காவல் துறையின் பிற அலகுகள் பரவலாக்கப்பட்ட வலைப்பின்னல் (WAN) மூலம் இணைக்கப்பட்டுள்ளன.

### 1. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு படைக்கு வரும் அழைப்புகளை மாநில காவல் நவீன கட்டுப்பாட்டு அறை மற்றும் அவசரகால உதவி மையத்திற்கு திசை திருப்புதல்

ஒன்றிய அரசின் கொள்கையின்படி, இத்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு, தமிழ்நாடு அரசால் ரூ.15.655 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டு,

அதன்பேரில், தற்போதைய கணினி உதவியுடன் கூடிய வடிவமைப்பு மென்பொருள் மாற்றப்பட்டு 101–க்கான அனைத்து அழைப்புகளும் மாநில காவல் நவீன கட்டுப்பாட்டு அறை மற்றும் அவசரகால உதவி மையத்தில் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் பேரில் 101–க்கான அனைத்து அழைப்புகளும் பரிசோதனை அடிப்படையில் மாநில காவல் நவீன கட்டுப்பாட்டு அறை மற்றும் அவசரகால உதவி மையத்திற்கு மாற்றப்பட்டு, இப்பணி விரைவில் நிறைவு செய்யப்படும்.

இதற்காக தொலைபேசி இணைப்பகம் ரூ.2.04 கோடி செலவில் நவீன உயர் ரகமாக மாற்றம் செய்யப்பட்டு, அவசர உதவிக்கான அழைப்புகள் அனைத்தும் மாநில காவல் நவீன கட்டுப்பாட்டு அறை மற்றும் அவசரகால உதவி மையத்திற்கு முழுமையாக மாற்றப்படும்.

2. **மாநில காவல் நவீன கட்டுப்பாட்டு அறை மற்றும் அவசரகால உதவி மையத்திற்கு இந்திய தரச் சான்றிதழ் பெறுதல்**

தமிழகத்தில் 14 கணினி இணைப்பு கட்டுப்பாடுகள் இருக்கக்கூடிய நவீன தரவுத் தளம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் 82 லட்சம் அவசரகால அழைப்புகளின் விவரங்களும், 13 லட்சம் 'காவலன் செயலி' பயன்படுத்துவோரின் தகவல்களும் உள்ளன.

தரவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு, இம்மையத்திற்கு இந்திய தரச் சான்றிதழ் (ISO – 27001) பெற பணி நடைபெற்று வருகிறது. இப்பணி விரைவில் நிறைவடையும்.

3. **மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறை மற்றும் அவசரகால செயல் உதவி மையம் அமைத்தல்**

மாநிலம் முழுவதுமிருந்து 100 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டால் அந்த அழைப்பை மாநில அளவிலுள்ள ஒரு நவீன கட்டுப்பாட்டு அறையில் பெறும் வகையிலான திட்டம் ரூ.11.43 கோடி செலவில் செயல்பட்டு வருகிறது.

இதே போன்று, புதுதில்லியிலுள்ள ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் பேரில், அவசரகால செயல் உதவி மைய திட்டத்தின் ஒரு பகுதியாக, 112 என்ற எண்ணை தொடர்பு கொண்டால் அந்த அழைப்புகள் அனைத்தும் சென்னை எழும்பூரிலுள்ள மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறைக்கு வரும் வகையில் செயல்படுத்தப் பட்டுள்ளது. மேலும், அந்த அவசரகால அழைப்புகள் அங்கிருந்து உடனடியாக சம்பந்தப்பட்ட இதர துறைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டு அவற்றுடன் தொடர்பு ஏற்படுத்தப்படுகிறது.

இம்மையத்தில், இதுவரை சுமார் 82.60 லட்சம் அழைப்புகள் பெறப்பட்டுள்ளன. மேலும், இம்மையமானது காவலன் செயலியை பயன்படுத்தி பெறப்பட்ட சுமார் 59,193 அவசரகால புகார் அழைப்புகளையும் கையாண்டுள்ளது. இதுவரை சுமார் 13 லட்சம் பொதுமக்கள் 'காவலன் செயலியை' பதிவிறக்கம் செய்துள்ளனர். இச்செயலியானது பெண்கள் மற்றும் முதியோர்களின் துயர்களை நீக்குவதற்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், காவல் நிலையங்களில் உட்சுற்று தொலைக்காட்சி கேமராக்கள் நிறுவுதல், மொபைல் கடவுச்சீட்டு செயலி, தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல், ஆடையில் அணியும் கேமராக்கள் வாங்குதல் மற்றும் கணினிசார் தடய அறிவியல் பொருட்களை வாங்குதல் போன்ற பணிகளையும் இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

**4. எம்.கடவுச்சீட்டு காவல் பயன்பாட்டு மென்பொருள்**

தமிழ்நாடு புதிய முயற்சிகள் தொடக்க திட்டத்தின்கீழ் எம்.கடவுச்சீட்டு என்று அழைக்கக் கூடிய ஸ்மார்ட் கைப்பேசி மூலம் கடவுச்சீட்டு வழங்கும் காவல் பயன்பாட்டு மென்பொருளை நடைமுறைப்படுத்தப்பட்டு தற்போது இத்திட்டம் மாநில அரசுக்கு வருவாயை ஈட்டித் தருகிறது.

## (xvii) மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவானது, 96 அலகுகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்த அலகுகள், 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தை அமல்படுத்தி வருகிறது.

அண்டை மாநிலங்களிலிருந்து போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மதுபானங்கள், எரிசாராயம் மற்றும் சாராயப் பாக்கெட்டுகள் தமிழ்நாட்டிற்குள் கொண்டு வருவதைத் தடுப்பதற்கு, தற்போது மாநிலத்தில் 45 மதுவிலக்கு சோதனைச் சாவடிகளும், 7 நடமாடும் சோதனைச் சாவடிகளும் இயங்கி வருகின்றன. கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல், இருப்பில் வைத்திருத்தல் மற்றும் கள்ளச்சாராய விற்பனை ஆகியவற்றை ஒழிக்கவும், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள் கடத்தப்படுவதைத் தடுக்க இப்பிரிவு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**(xviii) ஊர்க்காவல் படை**

இப்பிரிவு 1963 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊர்க்காவல் படை விதிகளின்படி, 1963 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், வெள்ளம், தீ விபத்து, புயல் போன்ற அவசர

கால நிகழ்வுகளை சமாளிப்பதற்கும் தன்னார்வ குடிமக்களை ஈடுபடுத்தி அமைக்கப்பட்ட ஒரு பிரிவாகும். போக்குவரத்தை சீர்படுத்துதல், கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்துதல், உள்நாட்டு பாதுகாப்பை பலப்படுத்துவது, மத நல்லிணக்கத்தை மேம்படுத்துவது, உடல் ஆரோக்கியம், சுகாதாரம், சாலை பாதுகாப்பு முதலியன பற்றி, விழிப்புணர்வு ஏற்படுத்துவது போன்ற பணிகளில் ஊர்க்காவல் படை உறுதுணையாக உள்ளது.

தற்போது, 142 ஊர்க்காவல் படை அணிகள் (116.5 ஆண்கள் அணி மற்றும் 25.5 பெண்கள் அணி) செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 2,805 மகளிர் ஊர்க்காவல் படையினர் உட்பட மொத்தம் 15,622 ஊர்க்காவல் படையினர் பணியாற்றி வருகின்றனர். அனைத்து மாவட்டங்கள் மற்றும் காவல் ஆணையரகங்களில் மகளிர் பிரிவு உள்ளிட்ட ஊர்க்காவல் படையின் அலகுகள் உள்ளன. கோவிட் பெருந்தொற்று காலத்திலும் இப்படையினர் தொடர்ந்து காவல் துறையினருக்கு உதவி புரிந்து வருகின்றனர்.

## VIII. காவலர்களுக்கான நலத்திட்டங்கள்

### அ) தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் இறப்பு நிவாரணநிதி, கல்வி உதவித்தொகை, சந்தாதாரர் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு சிறப்பு நிவாரணத் தொகை போன்ற உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இது தவிர, சந்தாதாரர்களுக்கு உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் நோய்களுக்கு, மருத்துவச் சிகிச்சை மேற்கொள்வதற்காக அதிகபட்ச நிதியுதவியாக ரூ.4 லட்சம் வரை வழங்கும் திட்டமும் செயல்பாட்டில் உள்ளது. தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடை திட்ட பொதுக்கணக்கிலிருந்து உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் நோய்களுக்கான மருத்துவச் சிகிச்சை பெறும் வகையில் ஆண்டொன்றிற்கு ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2020–ஆம் ஆண்டில், 203 காவல் பணியாளர்களின் நலனுக்காக சுமார் ரூ.3.06 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## ஆ) ஒருங்கிணைந்த உள் சுற்று கைபேசி குழு (CUG) செறிவு அட்டைகள் (SIM cards) வழங்குதல்

காவலர்களின் பயன்பாட்டிற்காக, ஒருங்கிணைந்த உள்சுற்று கைபேசி குழு திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இதன் மூலம் 1.2லட்சம் காவல் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், காவல் பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் அதிகபட்சமாக ஏழு செறிவட்டைகளை (SIM card) இத்திட்டத்தின் கீழ் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

## (இ) வருடாந்திர அரசு கொடையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும்திட்டங்கள்

**பரிசுத் திட்டம்**

ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும் / நகரத்திலும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வுகளில், முறையே முதல் 10 இடங்களில் தேர்ச்சி பெறும் காவல் துறை / அமைச்சுப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு பரிசுகள் வழங்கும்

நோக்கத்தில் இத்திட்டம் துவக்கப்பட்டது. இப்பரிசுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன.

| வகுப்பு | முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் | 4–ம் இடம் முதல் 10–ம் இடம் வரை |
|---|---|---|---|---|
| 10 | ரூ.6,500 | ரூ.4,500 | ரூ.2,500 | ரூ.2,000 |
| 12 | ரூ.7,500 | ரூ.5,500 | ரூ.3,500 | ரூ.2,500 |

2020–2021 கல்வி ஆண்டில், இத்திட்டத்தின் மூலம் 634 காவல் துறை / அமைச்சுப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு ரூபாய் 21.15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு அரசு சிறப்பு கல்வி உதவித்தொகை

காவல்துறை / அமைச்சுப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு உயர் கல்விக்கென சிறப்பு கல்வி உதவித் தொகையை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்படி, பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 100 மாணவ, மாணவியருக்கு தலா ரூபாய் 25,000/– அல்லது கல்வி நிறுவனங்களில் செலுத்தப்படும் சரியான கட்டணம், இவற்றில் எது குறைவானதோ, அத்தொகையை நான்கு

வருட காலத்திற்கு அல்லது அப்படிப்பு முடியும் வரை வழங்கப்படுகிறது.

2020-2021ஆம் கல்வி ஆண்டில், காவல் பணியாளர்களின் பிள்ளைகள் 201 பேருக்கு ரூபாய் 41 லட்சம் வழங்கப்பட்டது.

**கருணைத் தொகை வழங்குதல்**

காவல் பணியாளர்கள் பணியின்போது வீரதீர செயல்களில் ஈடுபட்டு அல்லது துன்பகரமான சூழ்நிலைகளில் சிக்கி உயிரிழக்க நேரிட்டால் அல்லது ஊனம் ஏற்பட்டால் அல்லது காயமடைந்தால், அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள்/ இழப்புகளுக்கு ஈடு செய்யும் வகையில் அரசினால் கருணைத் தொகை ரூபாய் 20,000/- முதல் ரூபாய் 15 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

2020-2021 ஆம் நிதியாண்டில், 2 காவல் பணியாளர்களுக்கு ரூபாய் 17.00 லட்சம் நிதி கருணைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**உணவு மானியத் திட்டம்**

இத்திட்டத்தின் மூலம் காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான காவல் பணியாளர்களுக்கு அரிசி, சர்க்கரை போன்ற அத்தியவாசிய உணவுப் பொருள்கள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ், பொது மக்களுக்கு வழங்கப்படும் விலையில் பாதி விலையில் வழங்கப்படுகிறது. இதற்காக, அவர்களுக்கு காக்கி நிறத்தில் தனித்தன்மையான குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நாள் வரையில், 63,205 காவல் பணியாளர்கள் இதன் மூலம் மானிய விலையில் அத்தியாவசியப் பொருட்களை பெற்று வருகின்றனர்.

2020-2021 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கு ஏறக்குறைய ரூபாய் 8.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**புறநோயாளிகளுக்கான மருத்துவ சேவை மையங்கள்**

காவல் பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கும் பயனளிக்கும் வகையில், 26 ஆயுதப்படை தலைமையிடங்களிலும், 10 தமிழ்நாடு

சிறப்புக்காவல் படை தலைமையிடங்களிலும், புறநோயாளிகளுக்கான மருத்துவ சேவை மையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**முழு உடல் மருத்துவப் பரிசோதனை**

30 வயது நிரம்பிய காவல் பணியாளர்களுக்கு ஆண்டிற்கு ஒருமுறை அரசு மருத்துவமனைகளில் இலவச முழு உடல் மருத்துவப்பரிசோதனை அளிக்கப் பட்டு வருகிறது.

**தமிழ்நாடு காவல் சிறப்பு அங்காடிகள்**

மாநிலம் முழுவதும் 50 தமிழ்நாடு காவல் சிறப்பு அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. பணியிலுள்ள மற்றும் ஓய்வு பெற்ற காவல் பணியாளர்கள், தீயணைப்பு துறை பணியாளர்கள் வனத்துறை மற்றும் சிறைத்துறை பணியாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகின்றனர். தமிழ்நாடு காவல் சிறப்பு அங்காடிகளால் 1,63,646 குடும்பங்கள் (காவல் துறை–1,43,564 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை–8,177, சிறைத்துறை–5,303 மற்றும் வனத்துறை–6,602) பயனடைந்துள்ளனர்.

**காவலர் அங்காடி செயலி**

பயனாளிகள், தமிழ்நாடு காவல் அங்காடியில் தங்களுக்கு தேவைப்படும் பொருட்களின் விலை மற்றும் சரக்கு இருப்பு குறித்த விவரங்களை தங்கள் கைபேசி மூலம் தெரிந்து கொள்ள ஏதுவாக 'காவலர் அங்காடி' என்ற கைபேசி செயலி மற்றும் www.tnpolicecanteen.com என்ற இணையதள வசதி துவக்கப்பட்டது. இதுவரை 49,200 பேர் அந்த செயலியை பதிவிறக்கம் செய்துள்ளனர்.

**தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி**

பணியின்போது உயிரிழக்கும் காவல் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. 2020-2021ஆம் ஆண்டில் 478 பயனாளிகளுக்கு ரூ.18.70 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கொரோனா நோய் தொற்று தடுப்பு பணியில் முன்களப் பணியாளராக பணியாற்றும் போது கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டு உயிரிழந்த

ஒவ்வொரு காவல் பணியாளரின் குடும்பத்தினருக்கும் தலா ரூ.25 இலட்சம் சிறப்பு நிவாரண நிதியாக வழங்கப்பட்டு வருகிறது.

**கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள்**

காவல் பணியாளர் பணியின்போது உயிரிழக்க நேரிட்டால், அவரை இழந்து வாடும் குடும்பத்திலிருந்து தகுதியுடைய மற்றும் சட்டப்படியான வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படுகிறது.

**காவலர் நிறைவாழ்வு பயிற்சித்திட்டம்**

தமிழ்நாடு காவல் ஆளிநர்களுக்கு ஏற்படும் உடல் மற்றும் மனம் சார்ந்த அழுத்தங்களை போக்கவும், அவர்களின் பணிசார் திறனை மேம்படுத்தவும், பெங்களூருவில் உள்ள தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் ஆய்வு நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து 'காவலர் நிறைவாழ்வு பயிற்சித்திட்டம்' துவங்கப்பட்டது.

இதுவரை, காவல் ஆளிநர்கள் 90,932 பேரும், அவர்தம் குடும்பத்தினர் 92,113 பேரும் இப்பயிற்சியில் பங்கேற்று பயனடைந்துள்ளனர்.

## IX. காவல் துறையில் வாகன வசதி

காவல் துறையில் மொத்தம் 19,672 வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. இவ்வாகனங்கள் காவல் ஆளிநர்களை ஏற்றிச்செல்வதற்கும், முக்கியமானவர்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள், சட்டம் மற்றும் ஒழுங்கினை நிலைநாட்டுதல், ரோந்துப்பணி செய்தல் ஆகியவற்றிற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. காவல் துறையின் பயன்பாட்டிலுள்ள வாகனங்கள் குறித்த விவரங்கள் பிற்சேர்க்கை–**VIII** – ல் தரப்பட்டுள்ளன.

## X. காவல்துறை கட்டடங்கள் மற்றும் காவலர்களுக்கான வீட்டுவசதி

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகமானது, காவல்துறையின் அனைத்து கட்டுமானப் பணிகள் மற்றும் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. காவல்துறை பணியாளர்களுக்குச் சொந்தமாக வீடு கட்டித்தரும் நலத்திட்டத்தைச்

செயல்படுத்தும் முக்கிய நோக்கத்தோடு தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம் உருவாக்கப்பட்டது. காலப்போக்கில், தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை மற்றும் சிறைத்துறைப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணிகளும் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, இக்கழகத்தின் பணிகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டன. அதன் பின்னர், காவல் நிலையங்கள் மற்றும் இதர காவல்துறை கட்டடங்கள் கட்டுவதற்கான பணிகளும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மற்றும் தென்காசி மாவட்டங்களில் மாவட்ட காவல் அலுவலகங்கள் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் வழங்கி, அதற்கான பணிகள் துவங்கப்பட உள்ளன.

## XI. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்

காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத்துறை ஆகிய துறைகளுக்குத் தேவையான சீருடை சார்நிலைப் பணியாளர்களை நியமிக்கும் நோக்கத்தோடு,

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் உருவாக்கப்பட்டது.

இவ்வாரியம், கீழ்க்காணும் பதவிகளுக்கான சீருடைப் பணியாளர்களை தேர்வு செய்கிறது:–

(அ) காவல் உதவி ஆய்வாளர்
(தாலுக்கா, ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்பு காவல் படை),

(ஆ) தொழில்நுட்பப் பிரிவு உதவி ஆய்வாளர்,

(இ) விரல் ரேகைப் பிரிவு உதவி ஆய்வாளர்,

(ஈ) இரண்டாம் நிலைக் காவலர்,

(உ) இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும்

(ஊ) தீயணைப்புப் படை வீரர்.

தமிழ்நாடு அரசு வகுத்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, பாரபட்சமற்ற முறையிலும், தகுதியின் அடிப்படையிலும் பணியாளர் தேர்வை வெளிப்படைத் தன்மையுடன் நடத்தும் அமைப்பாக இந்த தேர்வு வாரியம் செயல்படுவதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. உடல் தகுதி தேர்வுகளின்போது எண்ம முறை சாதனங்களைப்

பயன்படுத்தி, வெளிப்படையான முறையில் தேர்வுகளை நடத்துகிறது.

## XII. தமிழ்நாடு தடய அறிவியல் துறை

நீதியைச் சிறந்த முறையில் நிலைநாட்ட தடய அறிவியல் சேவை புரிவது இத்துறையின் முதன்மை குறிக்கோளாகும். தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வுக்கூடம் 1959–ல், மருத்துவத் துறையின் கீழ்செயல்பட்டு வந்த "வேதியியல் பரிசோதகர்களின் ஆய்வகம்" (1849), மதுவிலக்கு மற்றும் கலால் ஆய்வகம் (1886) மற்றும் காவல் துறையின் கீழ்செயல்பட்டு வந்த அறிவியல் பிரிவுகள் (1905) ஆகியவற்றை ஒருங்கிணைத்து நிறுவப்பட்டது. 1984–ஆம் ஆண்டு இந்த ஆய்வகம் தடய அறிவியல் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இத்துறையானது மானுடவியல், துப்பாக்கியியல், உயிரியல், வேதியியல், கணினி தடயவியல், மரபணு ஆய்வு, ஆவண ஆய்வு, கலால், வெடிபொருள் ஆய்வு, போதைப்பொருள் ஆய்வு, இயற்பியல், மதுவிலக்கு பொருட்கள் ஆய்வு, குருதி வடிநீரியல் மற்றும் நஞ்சியல்

ஆகிய 14 சிறப்பு பகுப்பாய்வுப் பிரிவுகளை உள்ளடக்கிய தலைமை ஆய்வகத்தைச் சென்னையில் கொண்டுள்ளது. பல்வேறு சிறப்பு பகுப்பாய்வு பிரிவுகளில் இருந்து பகுப்பாய்வு செய்வதற்காக பெறப்பட்ட குற்றச் சான்றுகளை ஆவணப்படுத்த தனியாகப் புகைப்படப்பிரிவு ஒன்று உள்ளது.

கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், விழுப்புரம், தர்மபுரி ஆகிய 10 இடங்களில் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன.

புலன் விசாரணை செய்யும் காவல் அதிகாரிகளுக்கு மாவட்ட அளவில் அறிவியல் சார்ந்த சேவைகளை வழங்குவதற்காக ஒவ்வொரு காவல் மாவட்டங்கள் / ஆணையரகங்களில் ஒன்று என்கிற வீதத்தில் 38 நகரும் தடய அறிவியல் ஆய்வகங்கள் உள்ளன.

மேலும், இத்துறையினர் குற்றச் சம்பவ இடங்களுக்கு சென்று, தடயங்களை சேகரித்து, மாநிலம்

முழுவதும் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் விசாரணை அதிகாரிகளுக்கு உதவிகரமாக இருந்து வருகின்றனர்.

## XIII. முடிவுரை


தமிழ்நாடு காவல் துறையானது, மாநிலத்தின் ஒட்டுமொத்த வளம், பொருளாதார வளர்ச்சி மற்றும் துரித தொழில் முன்னேற்றத்திற்கு தேவையான திறமையான ஆளுமையை வழங்குவதற்கான பங்களிப்பாக தனது முயற்சியை என்றென்றும் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது. கோவிட்-19 பெருந்தொற்று காலகட்டத்திலும், தமிழ்நாடு காவல்துறையினர் முன்களப் பணியாளர்களாக களத்தில் நின்று அரசின் நோக்கம் நிறைவேறவும், பொது மக்களை பாதுகாக்கவும் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்டனர். பொதுமக்கள், வறுமையில் வாடுவோர், சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் ஆகியோருக்கு தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டுமென்ற முக்கிய நோக்கத்தினை முதன்மையாகக் கொண்டு செயலாற்றிவரும் இந்த அரசுக்கு உறுதுணையாக செயல்படுவதில் காவல்துறையினர் முக்கிய பங்காற்றுகின்றனர். காவல் ஆளிநர்களின்

மனப்பாங்கினை அதற்கேற்றவாறு தகவமைத்து, அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலமே இது சாத்தியப்படும். காவல்துறையின் அனைத்து முயற்சிகளும், காவல்துறையின் செயல்பாடுகளை சிறப்பாக மேம்படுத்துதல் மற்றும் சேவை வழங்குவதில் மனிதாபிமானத்துடன் கூடிய நட்புறவோடு பொதுமக்களை அணுகுதல் போன்ற குறிக்கோள்களை நோக்கியதாக இருத்தல் வேண்டும். தகுந்த திட்டமிடுதல் மற்றும் முறையான முயற்சிகள் மூலமாக இத்தகைய உன்னத குறிக்கோள்களை தமிழக காவல்துறை நிச்சயம் எட்டும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு உள்ளது. பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய தமிழ்நாடு காவல்துறைக்கு இந்த அரசு எப்போதும் வழிகாட்டியாகவும், உறுதுணையாகவும் திகழும்.

**மு.க.ஸ்டாலின்**

**முதலமைச்சர்**

## விளக்கப்படம் – 1



நிருவாக அமைப்பு
காவல்துறை தலைமை இயக்குநர் /காவல்படையின் தலைவர்
சட்டம் மற்றும் ஒழுங்கு
மண்டலங்கள்
4
ஆணையரகங்கள்
7
சரகங்கள்
11
மாவட்டங்கள்
39
உட்கோட்டங்கள்
249
தாலுகா காவல் நிலையங்கள்
1302
அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்
202
போக்குவரத்து காவல் நிலையங்கள்
243
இரயில்வே காவல் நிலையங்கள்
47

## விளக்கப்படம் – 2


காவல் துறையிலுள்ள சிறப்பு பிரிவுகள்
சிறப்பு குற்றப் பிரிவுகள்
குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை
குற்றம் - போதை தடுப்பு, அறிவுசார் சொத்துரிமை பிரிவு
கணினிசார் குற்றப் பிரிவு
பொருளாதார குற்றத் தடுப்புப் பிரிவு
மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு
சிலைத் திருட்டு தடுப்புப் பிரிவு
களப் பிரிவுகள்
சிறப்புக் காவல் படை
இருப்புப் பாதை
சிறப்பு இலக்கு படை
மாநில பேரிடர் நிவாரண படை
கடலோர பாதுகாப்புக் குழுமம்
ஊர்க்காவல் படை
நுண்ணறிவுப் பிரிவுகள்
தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை
க்யூ பிரிவு
திட்டமிட்ட குற்ற நுண்ணறிவுப் பிரிவு
சிறப்புப் பிரிவு
பாதுகாப்புப் பிரிவு
இதர பிரிவுகள்
சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்
போக்குவரத்து திட்டமிடல் மற்றும் சாலைப் பாதுகாப்பு
பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்பு பிரிவு
மாநில குற்ற ஆவணக் காப்பகம்
தொழில் நுட்பப் பணிகள்
பயிற்சிப் பிரிவுகள்
தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம்
காவல் பயிற்சிக் கல்லூரி/காவல் பயிற்சிப் பள்ளிகள்
காவல் பொதுப் பள்ளி

## பிற்சேர்க்கை –I

## 2019 முதல் 2021 ஜூன் வரையிலான காலகட்டத்தில் களவுக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளும், கண்டுபிடிப்பும்


| வ. எண் | குற்றத்தின் தலைப்பு | 2019 | | 2020 | | 2021 ஜூன் வரை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவு* | க.பி* | பதிவு* | க.பி* | பதிவு* | க.பி* |
| 1. | ஆதாயக் கொலை | 67 | 62 | 64 | 57 | 43 | 36 |
| 2. | கொள்ளை | 113 | 107 | 128 | 123 | 53 | 47 |
| 3. | வழிப்பறி (உடைமை பறிப்பு வழக்குகள் உட்பட) | 2,444 | 2,368 | 2,023 | 1,570 | 1,102 | 885 |
| 4. | கன்னக் களவு | 4,392 | 2,794 | 4,275 | 2,347 | 2,115 | 1,786 |
| 5. | திருட்டு | 15,684 | 8,497 | 12,492 | 6,465 | 5,510 | 4,268 |
| **மொத்தம்** | | **22,700** | **13,828** | **18,982** | **10,562** | **8,823** | **7,022** |

பதிவு*– பதிவு செய்யப்பட்டவை

க.பி* – கண்டுபிடிக்கப்பட்டவை

## விளக்கப்படம் – 3

## களவுக் குற்றங்கள் தொடர்பான வழக்குகள் பதிவு செய்யப்பட்டவை மற்றும் கண்டுபிடிக்கப்பட்டவை 2019–2021 (ஜூன் வரை)



## பிற்சேர்க்கை –II

## (ரூபாய் கோடியில்)

| வ. எண் | சொத்து | 2019 | 2020 | 2021 (ஜூன் வரை) |
|---|---|---|---|---|
| 1 | இழக்கப்பட்ட களவுச் சொத்து | 172.31 | 111.43 | 71.46 |
| 2 | மீட்கப்பட்ட சொத்து | 114.68 | 68.96 | 41.48 |
| 3 | மீட்பு சதவீதம் | 67% | 62% | 58% |

குறிப்பு– 2021–ஆம் ஆண்டு 30.06.2021 வரையிலான தரவுகள் உத்தேசமான எண்ணிக்கை மட்டுமே.

தமிழ்நாட்டில் நடைபெற்ற 2021–ம் ஆண்டுக்கான குற்றம் விவரங்கள் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.

# பிற்சேர்க்கை – III

## 2019 முதல் 2021 ஜூன் வரை பதியப்பட்ட இந்திய தண்டனைச்சட்ட வழக்குகள் (தலைப்புவாரியாக)

| வ. எண் | குற்றத்தின் தலைப்பு | 2019 | 2020 | 2021 ஜூன் வரை |
|---|---|---|---|---|
| சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள் | | | | |
| 1 | ஆதாயக் கொலை | 67 | 64 | 43 |
| 2 | கூட்டுக் கொள்ளை | 113 | 128 | 53 |
| 3 | கூட்டுக் கொள்ளையில் ஈடுபட குழுமியிருத்தல் | 61 | 68 | 42 |
| 4 | வழிப்பறி | 2,444 | 2,023 | 1,102 |
| 5 | கன்னக்களவு | 4,392 | 4,275 | 2,115 |
| 6 | திருட்டு | 15,684 | 12,492 | 5,510 |
| கொடுங் குற்றங்கள் | | | | |
| 7 | கொலை | 1,678 | 1,597 | 777 |
| 8 | கொலை முயற்சி | 2,478 | 2,548 | 1,266 |
| 9 | கொலை அல்லாத மரணம் விளைவிக்கும் குற்றம் | 68 | 72 | 18 |
| 10 | அடிதடி வழக்கு | 19,041 | 20,867 | 10,353 |
| 11 | கலவரங்கள் | 1,722 | 2,122 | 1,082 |
| பெண்களுக்கு எதிரான குற்றங்கள் | | | | |
| 12 | கற்பழிப்பு | 370 | 404 | 197 |
| 13 | வரதட்சணை மரணங்கள் | 28 | 40 | 11 |
| 14 | மானபங்கம் | 803 | 892 | 416 |
| 15 | பாலியல் வன்கொடுமை | 7 | 31 | 18 |

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | கணவன் மற்றும் உறவினர்கள் கொடுமை | 781 | 689 | 336 |
| 17 | பெண் கடத்தல் | 728 | 633 | 381 |
| **பிற முக்கிய குற்றங்கள்** | | | | |
| 18 | ஆள் கடத்தல் | 170 | 132 | 61 |
| 19 | நம்பிக்கை மோசடி | 154 | 141 | 47 |
| 20 | தீ வைத்தல் | 395 | 463 | 234 |
| 21 | மோசடி | 3,289 | 2,717 | 1,294 |
| 22 | கள்ளநோட்டு | 69 | 38 | 32 |
| 23 | மரணம் ஏற்படுத்தும் விபத்துக்கள் | 10,259 | 7,559 | 6,000 |
| 24 | மரணம் ஏற்படுத்தாத விபத்துக்கள் | 47,524 | 37,925 | 20,238 |
| 25 | பிற இ.த.ச. குற்றங்கள் | 55,786 | 53,912 | 31,942 |
| 26 | கோவிட்–19 வழக்குகள் | | 7,39,864 | 1,34,692 |
| குற்ற விகிதாச்சாரம் | | **205.89** | **1075.33** | **263.21** |
| மக்கள் தொகை (இலட்சங்களில்) | | **816.49** | **829.23** | **829.23** |
| மொத்த இ.த.ச. வழக்குகள் | | **16,8111** | **8,91,696** | **2,18,260** |

குறிப்பு– 2021–ஆம் ஆண்டு 30.06.2021 வரையிலான, தரவுகள் உத்தேசமான எண்ணிக்கை மட்டுமே.

தமிழ்நாட்டில் நடைபெற்ற 2021–ம் ஆண்டுக்கான குற்றம் தொடர்பான விவரங்கள் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.

# பிற்சேர்க்கை –IV

## வன்குற்ற நிகழ்வுகளும், தீர்க்கப்பட்டவைகளும்

## 2019 – 2021 (ஜூன் வரை)

| வ. எண் | தலைப்பு | 2019 | | | | 2020 | | | | 2021 ஜூன் வரை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவு | கு.ப. | பு.வி | பி.வ. முடிப்பு | பதிவு | கு.ப. | பு.வி | பி.வ. முடிப்பு | பதிவு | கு.ப. | பு.வி | பி.வ. முடிப்பு |
| 1 | கொலை | 1,67 | 961 | 669 | 48 | 1,597 | 919 | 638 | 40 | 777 | 145 | 622 | 10 |
| 2 | கொலை முயற்சி | 2,478 | 989 | 1,449 | 40 | 2,548 | 826 | 1,696 | 26 | 1,266 | 191 | 1070 | 5 |
| 3 | காயம் | 19,041 | 9,355 | 8,788 | 898 | 20,867 | 8,495 | 11,620 | 752 | 10,35 | 2,184 | 7,943 | 226 |
| 4 | கலவரம் | 1,722 | 617 | 997 | 108 | 2122 | 647 | 1376 | 99 | 1,082 | 120 | 930 | 32 |
| **மொத்தம்** | | **24,919** | **11,922** | **11,903** | **1,094** | **27,134** | **10,887** | **15,330** | **917** | **13,478** | **2,640** | **10,565** | **273** |

குறிப்பு– 2021ஆம் ஆண்டு 30.06.2021 வரையிலான, தரவுகள் உத்தேசமான எண்ணிக்கை மட்டுமே.

தமிழ்நாட்டில் நடைபெற்ற 2021–ம் ஆண்டுக்கான குற்றம் தொடர்பான விவரங்கள் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.

பதிவு –– பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (வருடம் வாரியாக)

கு.ப. –– குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவை (தண்டனை, விடுவிப்பு, முடிக்கப்பட்டது மற்றும் நீதிமன்ற விசாரணை நிலுவை) வருடம் வாரியாக

பு.வி –– புலன் விசாரணையில் உள்ளவை (வருடம் வாரியாக)

பி.வ. முடிப்பு –– பிற வகையில் முடிக்கப்பட்டவை (கண்டுபிடிக்க முடியாதவை, உண்மைக்கு அல்லது சட்டத்துக்குப் புறம்பானவை, மாற்றம் அல்லது தள்ளுபடி செய்யப்பட்டவை) வருடம் வாரியாக

# பிற்சேர்க்கை – V

| 2019 முதல் 2021 ஜூன் வரை நடந்த கொலைவழக்கு நிகழ்வுகளுக்கான காரணங்கள் | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | காரணங்கள் | 2019 | 2020 | 2021 ஜூன் வரை |
| 1 | குடும்பத் தகராறு | 430 | 357 | 174 |
| 2 | வாய்த் தகராறு | 320 | 322 | 157 |
| 3 | முன்விரோதம் | 275 | 312 | 135 |
| 4 | காதல் மற்றும் பாலியல் காரணங்கள் | 251 | 229 | 112 |
| 5 | பணம் கொடுக்கல் வாங்கல் | 72 | 55 | 29 |
| 6 | நிலத்தகராறு | 118 | 123 | 52 |
| 7 | குடிபோதையில் தகராறுகள் | 67 | 68 | 52 |
| 8 | வரதட்சணை | 3 | 5 | 1 |
| 9 | அரசியல் காரணங்கள் | 3 | 4 | 2 |
| 10 | இதர காரணங்கள்* | 131 | 118 | 61 |
| 11 | ஜாதி பாகுபாடு | 8 | 4 | 2 |
| மொத்தம் | | **1,678** | **1,597** | **777** |

குறிப்பு: (* இதர காரணங்கள் – கண்டுபிடிக்க முடியாத வழக்குகளை உள்ளடக்கியது)

## பிற்சேர்க்கை –VI

## பெண்களுக்கு எதிரான குற்றங்கள்

| வ. எண் | குற்ற வகைகள் | 2019–ல் பதிவானவை | 2020–ல் பதிவானவை | 2021 ஜூன் வரை பதிவானவை |
|---|---|---|---|---|
| 1 | பாலியல் பலாத்காரம் | 370 | 404 | 197 |
| 2 | வரதட்சணை மரணம் | 28 | 40 | 11 |
| 3 | கணவர் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமைப் படுத்தப்படுதல் | 781 | 689 | 336 |
| 4 | மானபங்கம் | 803 | 892 | 416 |
| **மொத்தம்** | | **1,982** | **2,025** | **960** |

குறிப்பு– 2021ஆம் ஆண்டு 30.06.2021 வரையிலான, தரவுகள் உத்தேசமான எண்ணிக்கை மட்டுமே. தமிழ்நாட்டில் நடைபெற்ற 2021–ம் ஆண்டுக்கான குற்றம் தொடர்பான விவரங்கள் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.

# பிற்சேர்க்கை –VII

## பெண்களுக்கு எதிரான குற்றநிகழ்வுகளும், தீர்த்துவைக்கப்பட்டவையும் (2019 –2021 ஜூன் வரை)

| வ. எண். | தலைப்பு | 2019 | | | | 2020 | | | | 2021 ஜூன் வரை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவு | கு.ப. | பு.வி | பி.வ. மு. | பதிவு | கு.ப. | பு.வி | பி.வ. மு. | பதிவு | கு.ப. | பு.வி | பி.வ. மு. |
| 1. | பாலியல் பலாத்காரம் | 370 | 159 | 188 | 23 | 404 | 205 | 184 | 15 | 197 | 36 | 157 | 4 |
| 2. | வரதட்சணை மரணம் | 28 | 19 | 9 | 0 | 40 | 16 | 24 | 0 | 11 | 1 | 9 | 1 |
| 3. | கணவர் மற்றும் அவரது உறவினர் களால் கொடுமை | 781 | 246 | 458 | 77 | 689 | 205 | 446 | 38 | 336 | 37 | 291 | 8 |
| 4. | மானபங்கம் | 803 | 360 | 387 | 56 | 892 | 360 | 457 | 75 | 416 | 81 | 324 | 11 |
| 5. | **மொத்தம்** | **1,982** | **784** | **1,042** | **156** | **2,025** | **786** | **1,111** | **128** | **960** | **155** | **781** | **24** |

பதிவு – பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (வருடம் வாரியாக)

கு.ப. – குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவை (தண்டனை, விடுவிப்பு, முடிக்கப்பட்டது – மற்றும் நீதிமன்ற விசாரணை நிலுவை) வருடம் வாரியாக

பு.வி – புலன் விசாரணையில் உள்ளவை (வருடம் வாரியாக)

பி.வ. மு – பிற வகையில் முடிக்கப்பட்டவை (கண்டுபிடிக்க முடியாதவை, உண்மைக்கு அல்லது – சட்டத்துக்குப் புறம்பானவை, மாற்றம் அல்லது தள்ளுபடி செய்யப்பட்டவை) வருடம் வாரியாக

**2019 –2021 ஜூன் வரையிலான காலகட்டத்தில் (குழந்தைகளை பாலியல் குற்றங்களில் இருந்து பாதுகாக்கும் சட்டம்) 'போக்ஸோ' சட்டப்படியான வழக்குகள்**

| வ. எண் | குற்றத் தலைப்பு | 2019 | 2020 | 2021 ஜூன் வரை |
|---|---|---|---|---|
| | | **வழக்குகள் எண்ணிக்கை** | | |
| 1. | போக்ஸோ– கற்பழிப்பு | 1,742 | 2,229 | 1,252 |
| 2. | போக்ஸோ– மற்றவை | 654 | 861 | 420 |
| | **மொத்தம்** | **2,396** | **3,090** | **1,672** |

குறிப்பு– 2021ஆம் ஆண்டு 30.06.2021 வரையிலான, தரவுகள் உத்தேசமான எண்ணிக்கை மட்டுமே.

தமிழ்நாட்டில் நடைபெற்ற 2021–ம் ஆண்டுக்கான குற்றம் தொடர்பான விவரங்கள் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.

## பிற்சேர்க்கை – VIII

## காவல்துறையின் பயன்பாட்டில் உள்ள வாகனங்களின் விபரங்கள் (30.06.2021 அன்றுள்ளபடி)

| வாகனத்தின் வகை | வாகனம் | வாகன எண்ணிக்கை |
|---|---|---|
| கனரக வாகனங்கள் | பேருந்து / லாரி | 843 |
| மிதரக வாகனங்கள் | சிற்றுந்து / வேன் | 1,865 |
| இலகுரக வாகனங்கள் | கார் / ஜீப் | 6,102 |
| மூன்று சக்கர / இரு சக்கர வாகனங்கள் | மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர்/ ஏடிவி மோட்டார் சைக்கிள், மிதிவண்டி | 10,033 |
| இதர வாகனங்கள் | வஜ்ரா, வருண், கிரேன், கைதிகள் வழிகாவல், வாட்டர் கேனன், ஆம்புலன்ஸ், ரெக்கர், தண்ணீர் லாரி, குண்டு துளைக்காத கார், பிக்–அப் வேன், குதிரை மிதவை, நடமாடும் நீதிமன்றம், ஆட்டோ, நடமாடும் கழிவறை வேன், குண்டு துளைக்காத வேன், நடமாடும் கலந்தாய்வு வேன், மீட்பு வேன் போன்றவை | 829 |
| | மொத்தம் | **19,672** |

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.